V2. No. 1. 3 Jan 1929

JL
M211, N28KM
N129.2.L
189036

KALANILYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

MADRAS

கலா நிலயம்

வியாழன் தோறும் வெளிவரும்

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஸ்ரீ ஜனவரிமீ 3உ [No. 1.

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Ourselves).	1
2.	தமிழ்ப் பாடம்.	3
3.	அப்பர். E. N. தணிகாசல முதலியார் B.A.,B.L.	5
4.	சந்திரை. T. N. சேஷாசலம் B. A.,B. L.	8
5.	அகப்பொருள் வரலாறு. K. இராமரத்நம் ஐயர் B. A.	10
6.	கம்பராமாயணம். T. N. சேஷாசலம் B. A.,B. L.	12
7.	காங்கிரஸ்.	15
8.	வர்த்தமானம்.	19

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமாயினும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி. இல் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினங் தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி. யில் அனுப்ப இயலாது.

மானேஜர்.

கலா நிலயம்.

189036

நற்றமிழின் பயிற்சியையும் கவிகளது நயங்களையும் நல்கிப் பின்னும் மற்றுமுள பாஷைகளின் மாண்பினையும் காட்டிவந்த ஆண்டுமொன்று முற்றியது. இந்நாள் நாம் முன்னும் பின்னும் சிறிது நோக்கல் முறைமையேயாகும். கலைகளின்பால் உணர்வும் ஊக்கமும் விளைப்பதொன்றே தன் கருமமாய்த் தலைநின்ற கலா நிலயம், அந் நோக்கத்திற்கு ஆதாரமாய தத்துவங்களையும், அக்கருமத்தை ஆற்றுதற்கு நினைத்த வகையினையும், சென்ற ஆண்டின் ஒன்பது தலையங்கங்களால் விளக்கியுளதாகையால் மீண்டுமதனை ஈண்டெடுத்தியம்பல் மிகை. மன்பதைத் தொகுதி தனக்குரிய மாண்புநிலை யெய்துதற்குப் பற்பலர் பல்வேறு துறைகளில் முயன்று வருகின்றார்களாயினும் இலக்கிய உணர்வு இயங்காமல் நிகழ்கின்ற வாழ்க்கை நிலைபெற்றிருக்காதென்னுங் கொள்கையை, சொல்லளவிலேனும், மறுப்பவர் இவ்வுலகில் யாரும் இலர். திண்ணனார் கண்ணப்பியதிறத்தைச் சென்ற ஆண்டு கற்றோர் மனம் அன்புப் பெருக்கெடுத்து ஆனந்தமாமாறு எழுதி முடித்த ஸ்ரீமான் T. P. மீனாக்ஷிசுந்தரம், இப்பொழுது குலசேகர ஆழ்வார் தம் அன்புக் கடலில் ஆழ்ந்துகுளித்துச் சில இரத்தினங்கள் திரட்டிக்கொண்டிருக்கின்றார். அவை செவ்விய கோவையாகச் சேர்ந்ததும் இப்பத்திரிகையில் சிறிது காலத்திற்குள் தோன்றத் தலைப்படும். அகப்பொருள் வரலாற்றை ஒருமுகப்படுத்திக் காதலர் கதையாகச் சென்ற ஆண்டு தொடங்கித் தொடர்ச்சியாய் ஓதிவருகின்ற ஸ்ரீமான். K. இராமஇரத்நம் ஐயர் [illegible] இந்த வா[illegible]டில் இன்னுஞ் சில வாரங்களில் இனிதின் பூர்த்தி செய்வார். பிறகு புறப்பொருள் வரலாறும் இம்முறையிலேயே வரைந்து வரலாகும்.

காந்தாரநாட்டுக் கட்டழகி காஷ்மீரஞ்சேர்ந்துவிட்டாள். பின்னுமோர் நாவல் எழுதித் தருவதற்கு நாம் ஸ்ரீமான். T. N. சேஷாசலத்தைக் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். அவரோ, தான் சிருஷ்டித்த பாத்திரங்கள் சொன்னபடி கேட்காமல் தலைக்குத்தலை தமது இஷ்டப்படியே நடந்துவிடுகின்றன வென்று சிறிது சலிப்படைகின்றார். "வஞ்சகன் அவ்விராடனை யாரேனும் கொல்லீரோ வென்று எத்தனைவிதித்தும் ஒருவரும் அது செய்யமுயன்றிலர். தானேயாகிலும் தற்கொலைபுரிந்துகொள்ள விதித்

கலாநிலய வாழ்த்துக் கவி

(எஸ். எ. வெங்குசாமி அய்யர் வக்கீல் திண்டுக்கல்.)

கலாநிலய மென்னுலகிற் கற்றறிந்தோர் மாட்டுக்
குலாவிவருஞ் செல்வக் குருந்து—கலாநிதியொத்
தென்றும் வளர்ந்துகலை யென்றென் [illegible] குன்றுது
நின்றொளிரக் காண்டீர் நிசம்.

ஆண்டின்றைவொன் றடுத்துவரு கின்றதனை
ஈண்டுரைத்த திவ்வாழ்த் திதுதருணம்—நீண்ட
புகழ்படைத்துக் காத்துப் புலவரெலாம் போற்றத்
திகழ்வடையு மென்றே தெரிந்து.

என்றுமதி* யுள்ளவரை யின்சொற் றமிழ்ச்சுவையை
நன்றுதவ வந்துதமிழ் நாடெங்கும்—சென்று
டுலாவிச் சிறப்புறுமென் றோர்ந்துரைப்ப திந்தக்
கலாநிலய வாழ்த்துக் கவி.

* என்று - சூரியன். மதி - சந்திரன்.

திருந்தேன். அதனையும் அவன் கேட்கவில்லை. மடாதிபதியும் மன்னனுமாய்ச் சேர்ந்து அவனை மன்னித்து விட்டனர். கடைசிகாலத்தில் அந்தத் துஷ்டனும் மனந்திருந்தி நல்லவனாகிவிட்டான். இதுதான் எத்தனை நிசமோ. கலாநாதனைக் காதலித்து மணம்புரியுமாறு காந்திமதிக்குச் சொல்லித்தந்தது கொஞ்சமன்று. கருணாகரர் சொல்லைத்தான் அவள் கேட்கவில்லையென்றால் அவரையும் கற்பித்த என்சொல்லை அவமதிக்கலாமா! இந்தக் கம்பியனுந்தா னென்ன, சொல்லச்சொல்லச் சண்டைக்கே தோள்தட்டித்திரிந்தான் எது எப்படியிருந்தாலும் இவ்விருவரையும் கட்டிவிடுவதே கருமம் என்று முயன்று முடிக்கின்ற தருணத்தில், என்னுடைய அநுமதியின்றியே விச்வகேசரி அவளைக் காஷ்மீரத்தரசனுக்கு அளித்துவிட்டான். தெய்வங் கெடுத்தால் செயலுண்டோவென்று எத்தனைதான் என்னுளே பொறுத்திருக்கப் பார்த்தாலும் முடியவில்லை. இதனை விலக்கும்படி காந்திமதியையும் கலாநாதனையும் கந்தனையும் தார்போட்டுத் தூண்டினேன். அவள் சித்திரப்பாவையைப்போல் சும்மாவிருந்து விட்டாள்; இவைகள் நெடுஞ்சுவர்போல் நின்றிருந்து பிறகு நீ கெட்டாய் நான் கெட்டேனென்று தொலைந்தன. இதை யெல்லாம் நினைக்கும்போது எனக்கு எரிச்சல் மண்டுகின்றது......ஆதலால் இந்தக் கோபம் தணியுமாயின், தணிந்தபின் வேறு சில பாத்திரங்களைக் கற்பித்து அவைகளேனும் விதித்தபடி கடவாமல் நடக்கின்றனவாவென்று பார்க்கின்றேன்,'' என்று நமக்குஎழுதியிருக்கின்றார். வயிற்றிற் பிறந்த பிள்ளைகளே அடங்கிநடப்பது அரிதாயிருக்க மனதிலுதித்த பிள்ளைகளா சொன்னபடி கேட்கும். குழந்தைப் பருவத்தில் மருட்டி உருட்டி அவர்களைத் தன்வழி நடத்தலாம். வயது வளரவளரத் தம்வழியே அவை செல்லும். அதுவன்றி, விதியும் ஒன்றிருக்கின்றது. இதனை உணர்ந்து ஸ்ரீமான் சேஷாசலம் மனஞ்சலிக்காது கற்பனைவரையிலுமே தன் கடமை எனத்துணிந்து இன்னுமொரு நாவல் விரைவினில் எழுதித் தருவாரென்று எதிர் பார்க்கின்றோம்.

கிரீஸ் தேசத்துத் தத்துவ சாஸ்திரிகளான அரிஸ்டோடல் பிளேடோ ஜீனோ முதலியவர்களது சரித்திரங்களையும் அவர்கள் கொள்கைகளையும் தெளிவுற விளக்கி, எந்நாளிலும் எந்நாட்டிலும் உயர்ந்த அறிவுடைய மேன்மக்கள் யாவரும் ஒருமுகமாய்ச் செய்த தத்துவ ஆராய்ச்சிகளின் முடிவினது ஒற்றுமையைச் செம்மையாய்க் காட்டிவருகின்ற ஸ்ரீமான் T. R. இராஜகோபால் இவ்வாண்டிலும் எபிக்டிடெஸ்ப்ளோடினஸ் போன்ற பல பண்டைய மேனாட்டு அறிஞர்களது உரைகளை ஆய்ந்துதருவார்.

பாரஸீகப்புலவர் ஓமர்கயாமின் உணர்வினது உண்மையைப் புதியதோர் முறையிற் புலப்படுத்தித் தந்தவரும், ரஸ்கின் செஸ்டர்டன் ஆஸ்கார்வைல்ட் போன்ற ஆங்கில அறிஞர்களின் கட்டுரைகளை மொழிபெயர்த்து வரைகின்றவரு மாகியஸ்ரீமான் K. இராஜகோபாலன் இந்தவருடத்திலும் ஆங்கிலத்தின் பெருமையை அப்பாஷைஅறியாதார்க்கு மேன்மேலும் தமிழின் உதவியால் அறிமுகப்படுத்தி வருவார்.

சென்றவருடம் போலவே T. N. சேஷாசலம் கம்பராமாயணக் கட்டுரைகள் வாரந்தோறும் வரைந்து வருவார். இவ்வாண்டு முடிவதோடு பாலகாண்டமும் முடியலாம் என நினைக்கின்றோம்.

இலக்கியமென்னு மலர்வனத்தினின்று ஒவ்வோர் துளித் தேன் கொண்டுவந்திருந்த "மதுகரம்" சிலப்பதிகாரத்திலுள்ள கானல்வரியை நன்கு ஆராய்ந்து தெளிய வைத்திருக்கின்றது. கோவலன் அகத்துறையில் பாடிய பாடல்களையும் அதனில் மாதவி உட்குறிப்புவேறு உண்டெனக் கருத நேர்ந்தவாறும் அதற்கவள் மாறாகப்பாடிய பாடல்களின் அமைதியையும் இன்புற விளக்கியுள்ள அக்கட்டுரை தேனிறாலென இவ்விதழ்களில் இன்னுஞ் சில நாட்களுக்குள் பாயத்தலைப்படும். பழமுதிர் சோலையிலிருந்து "சபரியும்" தீங்கனி சில கொணர்ந்து மெய்யறிவு வேண்டுகின்ற பசிக்கு உதவுவாள்.

ஸ்ரீமான். E. N. தணிகாசல முதலியார் அப்பரது சரித்திரத்தை ஆராய்ந்து அவரது பாசுரங்களின் அருமையையும் விளக்கி இன்றுமுதல் வாரந்தோறும் வரைந்துவர ஆரம்பித் திருக்கின்றனர்; ஸ்ரீமான்T.S. நடராஜப்பிள்ளை வில்லிபாரதத்தை ஆராய்ந்து சில கட்டுரைகள் வரைந்துதவ விருக்கின்றார். ஸ்ரீமான் V.K. இராமநாத ஐயரால் டால்ஸ்டாயின் கதைகள் சில மொழிபெயர்க்கப்பெற்று இவ்விதழ்களில் தோன்றி வரும்.

வானசாஸ்திரத்திற்குப் பதிலாக இவ்வாண்டில் மானதத்துவசாஸ்திரம் (Psychology) எழுதப்பெறும். இவர்களன்றி ஸ்ரீமான் R. முத்தையர்போன்ற பல அறிஞர்களும் முன்போலவே இப்பத்திரிகைக்கு அன்புடன் எழுதிவருவார்.

நமது தமிழ்ப்பாடம் இவ்வாண்டிலுந் தொடர்ந்து வரும். அதனால் பலர் பெரும்பய னடைகின்றனரென்பது அறிய எமது ஊக்கம் மிகுகின்றது. நளவெண்பாவில் கலிநீங்கு காண்டம் முடிந்தபின், அஷ்டப்பிரபந்தத்தில் ஒருநூறுசெய்யுள்கள் பாடமாகநடத்துவதற்கிருக்கிறோம். இப்பாடங்களைத் தொடர்ச்சியாக விரும்பிப் படிப்பவர்க்குப் பின் தமிழிலக்கியங்களை ஓதி உணர்வதற்குக் கஷ்டம் ஒன்றுந் தோன்றாதென்பது நிச்சயம். இலக்கியங்களை அனுபவிப்பதற்கு வேண்டிய இலக்கணமும் சொல்லிக்கொண்டு வருகின்றோம் எமதுமுறைசிறிதுபுதியதாயிருக்கலாம். உறுப்பைக்கொண்டு சொல்லின் இலக்கணம் தேர்வதற்குப்பதிலாக உருவத்தையும் பொருளையுங் கொண்டு தெரிந்துகொள்ளக் கூடிய வகையில் எமது இலக்கணப் பாடங்கள் அமைந்திருக்கின்றன. பெயர் வினை இடைச் சொற்களைப்பற்றி இதுகாறும் கற்றதைக் கொண்டு இனித் தொடரிலக்கணமும் புணரிலக்கணமும் கற்கலாம். அவைகளையும் கற்றபின் செய்யுள்களைப் பதம்பிரிப்பது எளிதாகும். பதம் இன்னதென்று தேர்ந்துகொண்டால் அகராதியின் உதவிகொண்டு சாதாரணமாக எந்தச் செய்யுளிற்கும் உரை செய்துகொள்ளப் பழகுவது அரியதன்று. கவிகளின் மரபும் செய்யுள்களின் போக்கும் நளவெண்பாவிலிருந்து தெரிந்து கொண்டிருப்பவர் பிறசெய்யுள்களின் கருத்தை உணரக்கூடியவராவர். அணிகளிற் பல தமிழ்ப் பாடத்திலேயே விளக்கி யிருக்கின்றோம். அவைகளும் இன்னும்வருஞ் சிலஅணிகளும் நினைவிலிருக்குமானால், அணிகளை ஆக்கி அமைக்கின்ற கவிகளது திறமையை உணர்வதற்குப்போதியதாயிருக்கும். அஷ்டப்பிரபந்தம் எடுத்துக்கொள்ளும்போது யாப்பிலக்கணத்தின் முக்கியமான விஷயங்களையும் விளக்கிவைப்போம். சென்றவாண்டு ஸ்ரீமான் E. N. தணிகாசலம் முதலியார் அவர்கள் எழுதிய "தேவாரமும் ஐந்திணையும்" என்னும் கட்டுரைத் தொடர்ச்சியினின்று பொருளிலக்கிணத்திற்கு வேண்டிய முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் முதலிய விஷயங்களை எளிதில் கற்றிருக்கக்கூடும். 'அகப்பொருள் வரலாறு' என்றுவரும்கட்டுரைகளிலிருந்துஅகப்பொருள் இலக்கணம்நன்று தெரியவந்திருக்கும் புறப்பொருள் இலக்கணமும் இனிக்கற்போம்.

இன்னபல வகைகளில் தமிழின் இன்பத்தையும் அவ்வின்பத்தை எய்தக்கூடிய சாதனங்களையும், ஆற்றல் சிறிதேனும் ஆசையின் தூண்டலால், திரட்டித் தந்து அதனைத் துய்த்தவர் எய்தவல்ல பயனையும் காட்டுகின்ற எம் முயற்சி, ஸர்வேச்வரனது திருவுள்ளத்திற்கு இசைந்ததாயின், இனிதின் நிறைவடையுமாறு பரசுகின்றோம்.

இந்தவருடத்திலிருந்து ஜூன்மாதத்து இறுதிவாரமும் டிசம்பர் மாதத்து இறுதிவாரமும் நமது காரியாலயத்திற்கு ஓய்வு நாட்களாயமையும். ஆதலால், இனி ஆண்டொன்றிற்கு 50 இதழ்களாகி, ஆயிரம் பக்கங்கள் நிறையும்.

தமிழ்ப் பாடம் 53.

[நளவெண்பா.]

கலிநீங்கு காண்டம்.

மூலப் பழமறைக்கு முன்னேயுங் காணலாம்
காலிக்குப் பின்னேயுங் காணலாம்—மால்யானை
முந்தருளும் வேத முதலே யெனவழைப்ப
வந்தருளுஞ் செந்தா மரை. 1.

பதப்பிரிவு:—மூலம் பழ மறைக்கு முன்னேயும் காணல் ஆம் காலிக்கு பின்னேயும் காணல் ஆம் மால் யானை முந்து அருளும் வேதம்முதலே என அழைப்ப வந்து அருளும் செம் தாமரை.

அன்வயம்:—'முந்து அருளும் வேதமுதலே,' என மால்யானை அழைப்ப, வந்து அருளும் செம்தாமரை, மூலப் பழமறைக்கு முன்னேயும் காணல்ஆம், காலிக்குப் பின்னேயும் காணல் ஆம்.

பதவுரை.

'முந்து - முதலில் (பிரம்மனுக்கு)
அருளும் - உபதேசித்து அருளிய
வேதம் - வேதங்களாற் குறிக்கப்படுகின்ற
முதலே - முதற் பரம் பொருளே'
என - என்று
மால் - மதமயக்கங் கொண்ட
யானை - யானையாகிய கஜேந்திரன்
அழைப்ப - அழைத்தவுடன்
வந்து - வந்து
அருளும் - அருள்செய்த
செம் - சிவந்த
தாமரை - தாமரை மலர்போன்ற திருவடிகளை,
மூலம் - முதலாகிய
பழ - பழைய
மறைக்கு - வேதங்களுக்கு
முன்னேயும் - (அகப்படாமல்) முன்னே செல்லவும்
காணல் ஆம் - காணலாகும்; (அப்படி வேதங்களுக்கு எட்டாப் பாதங்கள்)
காலிக்கு - பசுக் கூட்டங்களுக்கு
பின்னேயும் - பின்னால் தொடர்ந்து செல்லவும்
காணல் ஆம் - (கிருஷ்ணாவதாரத்தில்) காணக்கூடும்.

விளக்கம்:— (மாந்தர்களாகிய நாம்) காணல் ஆம்-காணக்கூடும். எதனைக் காணல்ஆம்? தாமரை-தாமரை மலர்போன்ற பாதங்களை. எப்படிப்பட்ட தாமரைமலர் போன்றபாதங்களைக்காணலாம்? செம்தாமரை-சிவந்த தாமரை மலர்போன்ற பாதங்களை. என்னசெய்த செந்தாமரைபோன்ற பாதங்களைக் காணலாம். அருளும் செம்தாமரை காணலாம். — அருள் செய்த செம் தாமரைமலர் போன்ற பாதங்களை நாம் காணலாம். என்ன செய்து அருளும்? வந்து அருளும் - எதிரே வந்து அருள்செய்த. எப்பொழுது வந்து அருளும் செம் தாமரையைக் காணலாம் — அழைத்தவுடன் வந்து அருள்செய்த செந்தாமரைபோன்ற பாதங்களைக் காணலாம்.

எது அழைப்ப வந்து அருளும் செம்தாமரையைக் காணலாம்? யானை - கஜேந்திரன் என்னும் யானை. அது எப்படிப்பட்ட யானை? மால் யானை - மதமயக்கம் கொண்ட யானை. அந்த மால்யானை எப்படி அழைப்ப? எனஅழைப்ப - என்றுகூப்பிட்டு அழைத்தவுடன். என்னவென்று மால் யானை கூப்பிட்டு அழைத்தவுடன் வந்து அருள்செய்த செந்தாமரை போன்ற பாதங்களைக் காணலாம்? முதலே என அழைப்ப - முதற் பரம்பொருளே என்று அவ்யானை அழைத்தவுடன். எந்த முதலே என மால் யானை அழைப்ப? வேதமுதலே என அழைப்ப-வேதங்களால் குறிக்கப்பட்ட முதற்பரம் பொருளேஎன்று அழைத்தவுடன். அந்த வேதம் எப்படிப்பட்டது? அருளும் வேதம் - பிரம்மனுக்கு உபதேசித்தருளிய வேதம். எப்பொழுது அருளும் வேதம்? முந்து அருளும் வேதம்-முதலில் பிரம்மனுக்கு உபதேசித்தருளிய வேதம்.

முந்து அருளும் வேதமுதலே என மால் யானை அழைப்ப வந்து அருளும் செந்தாமரையை எங்கே காணலாம்—முதலிலே பிரம்மனுக்கு உபதேசித்தருளிய வேதங்கள் குறிக்கின்ற முதற்பரம் பொருளே என்று மதமயக்கங்கொண்ட கஜேந்திரன் என்னும் யானை அழைத்தவுடன் வந்து அருள் செய்த செந்தாமரைபோன்ற பாதங்களை எங்கே காணலாம்? முன்னேயும் காணலாம் - முன் இடத்திலேயும் காணலாம். எதற்கு முன்னேயும் காணலாம்? மறைக்கு முன்னேயும் காணலாம் — வேதங்களுக்கு முன்னே முன்னே செல்லவே காணலாம். எப்படிப்பட்ட மறைக்கு முன்னேயும் காணலாம்? மூலப் பழமறைக்கு முன்னேயும் காணலாம் - எல்லாவற்றிற்கும் முதலானதும் பழையதானதும் ஆன வேதங்களுக்கு முன்னாலேயும் காணலாம்.

மூலப் பழமறைக்கு முன்னே காணலாகின்ற செந்தாமரைபோன்ற பாதங்களை வேறு எங்கேயும் காணலாம்? பின்னேயும் காணலாம் - பின்னால் தொடர்ந்து செல்வதையும் காணலாம். எதற்குப் பின்னேயும் காணலாம்? காலிக்குப் பின்னேயும் காணலாம் - பசுக் கூட்டங்களுக்குப் பின்னாலேயும் காணலாம்.

விரிவுரை:— இக் காண்டத்திற்குப் பாயிரமாகப் பாடிய கடவுள்வணக்கச் செய்யுளிது. ஸ்ரீமந் நாராயணன் உயிர்களை அளிக்கின்ற திறத்தைப் புகழேந்திப் புலவர் இங்கு மிகவும் அழகாகக் காட்டி யிருக்கின்றார். பிறவியெடுத்த வொருவன் சம்சாரமாகிய மடுவில் இறங்கித் தன்னுடைய ஆசையாகிய தாகத்தைத் தீர்த்துக்கொண்டு கரையேறிவிடலாம் என்று பார்க்கின்றான். அப்பொழுது அவனுடைய மெய் வாய் கண் மூக்கு செவியாகிய ஐந்து இந்திரியங்களும் அவனைப் பற்றிக்கொண்டு ஆசை தீர்ந்ததென்று கரையேற விடாமல் முதலைகளைப்போல் ஆழ ஆழ முழுக்கிக்கொண்டு போகின்றன. முதலில் இந்த ஆபத்து நேர்கின்றதென்பது தெரிந்துகொள்ளாமல் சுகமா யிருப்பவைகளை அனுபவிப்பதிலேயே மகிழ்ந்திருக்கின்றான். முதலையோ தன்னைக்கழுத்தளவுமுழுக்கும் வரையில் கஜேந்திரன் ஒன்றும் பயப்படவில்லை. "இது என்ன, ஒருசிறு ஜந்துதானே, நீரைப் பருகிய பின் உதறிவிட்டால் போகின்றது," என்று எண்ணியிருந்தது அந்த யானை. அவ்விதமே இந்திரியங்கள்

பற்றி யிழுப்பதால் சிறிது துன்பம் தோன்றினும், சம்சாரத்தால் கிடைக்கின்ற இன்பங்களை எல்லாம் அனுபவிக்கக்கூடிய வரையில் அனுபவித்துவிட்டுப் பிறகு இந்த இந்திரியங்களையெல்லாம் தங்கள் சுய சாமர்த்தியத்தினாலேயே வென்று அகற்றிவிடலாம் என்றிருப்பர் ஜனங்கள். ஆனால் கஜேந்திரனைப் போலவேதான்முடிவர். என்னசெய்வார் பாவம். தாம் தள்ள, அது இழுக்க இந்திரியங்களும் தாமுமாய் வெகுநேரம் போராடுகின்றனர் மாந்தர். முதலையைப் போலவே இத்திரிய வாஞ்சைகள் பிடித்தபிடியை விடுவதில்லை. தத்தளித்துத் தள்ளாடிக் கையுங்காலும் மனமுஞ் சோர்ந்து, "ஐயயோ! முழுகிப்போகின்றேனே!" என்று அலமருவார். ஈச்வரன் ஒருவன் இருக்கின்றான் என்ற நினைவே யில்லாது சுகத்தைத் தேடி அனுபவிப்பதும் துன்பத்தைப் புகுந்து விலக்குவதும் எல்லாம் தம் சாமர்த்தியமே என்று இறுமாந்து விவகரிக்கின்ற மாந்தர் கஜேந்திரனைப்போல் அடைகின்ற கதி இதுவே. ஆனால், ஈச்வரன் என்ன செய்துகொண் டிருக்கின்றான். "என் செயலால் ஆவதுஇனி யாதொன்று மில்லை" என்று கைசோர்ந்த பின்னேனும் தன்னை யிவர் கூப்பிட்டா லாகாதா வென்று காத்துக்கொண் டிருக்கின்றான் அக்கருணை வள்ளல். அப்படி இந்த இறுதிக் காலத்திலேனும் கூப்பிட்டால் போதும், "இதுவரையில் உன் சாமர்த்தியத்தையே நம்பி நம்பி என்னைக் கனவிலும் நினையாதிருந்த உனக்கு இப்பொழுது மாத்திரம் என்னைக் கூப்பிட வாயேது!" என்று பரிகசித்துப் பாராமுகமாய் இருந்து விடுவதில்லை. 'இந்தா', என்று அழைப்பதனின்முன், 'வந்தேன்' என்று எதிர்வந்து நிற்கின்றான். இந்தத் தனிப்பெரும் தகைமையைத்தான் புகழேந்திப்புலவர், "மால்யானை முந்து அருளும் செந்தாமரை" என்ற இனியசொற்களால் கொண்டாடுகின்றார். இந்த விஷயங்களை யெல்லாம் கம்பர், தன்னுடைய இராமாயணத்தில் இராமனுக்குப் பேர்வைக்கின்ற சந்தர்ப்பத்தில் பாடிய பாடலால் நன்றாக அறியலாம். அந்தச் செய்யுள் பின் வருமாறு :—

> ...ாமலை யத்தளர் கைக்கிரி யெய்த்தே
> அராவணை யிற்றுயில் வோயென வந்நாள்
> விராவி யளித்தருள் மெய்ப்பொரு ளுக்கே
> இராம னெனப்பெய ரீய்ந்தன னன்றே.

இந்தச் செய்யுளிற்கு ஸ்ரீமான். டி. யன். சேஷாசலம் ஐயர் முன் (முதல் வால்யூம். 475 வது பக்கத்தில்) எழுதியுள்ள விரிவுரையை எடுத்துப் படித்துக் கொள்வது நல்லது. 'பாம்பின்மேல் தூங்குகின்றவனே' என்று அழைப்பதில் அடங்கிய பொருளின் சிறப்பை அவர் மிகவும் நயமாகக் காட்டியுள்ளார்.

ஆபத்துக்காலத்தில் வாய்விட்டு அழைப்பவர்களை வந்து அளிக்கும்எம்பெருமான் சாதுக்களைத் தானாகச் சென்று அளிப்பார் என்பது தோன்ற இவருடைய பாதங்களைக் 'காலிக்குப் பின்னேயும் காணலாம். என்றார் புகழேந்தி. மால்யானையைப் போன்றவர்கள் அகங்காரமழிந்து தன்னைத் தஞ்சமென்று அடைந்தவுடன் முன்னே வந்து அளிக்கும் அத்தாள்கள் பசுவைப்போல் சாதுக்களாயிருப்பவர்களைக் காப்பாற்றுவதற்கு எளிமையாக அவர்களைத் தேடித் தேடித் தொடர்ந்துசெல்லும். ஆனால், தம்முடைய அறிவைக் கொண்டு வேதம் உபநிடதாதிகளை ஆராய்ந்து அப்பரம புருடனது பாதங்களை எட்டிவிடலாம் என்று எண்ணினாலோ ஒன்றும் பயன்படாது. கைக்கு அகப்பட்டு விட்டதுபோல் முன்னே கண்ணுக்குத் தெரியும். ஆனால் பிடிக்கப் போகும்போது அப்பாதங்கள் முன்னே முன்னே போய்க்கொண்டே இருக்குமே அல்லாது, சாஸ்திர ஆராய்ச்சியறிவிற்கு ஒருபோதும் அகப்படாது. "நான்மறை தேடிக்காணா மலரடியோன்" என்றும், "சுரருடனே முனிவர்களும் சுருதி நான்கும் தேடுகின்ற பதம்" என்றும் "எங்கள் நான்மறைக்கும் தேவர் அறிவிற்கும் பிறர்க்கும் எட்டாச் செங்கண்மால்" என்றும், பிற கவிகள் கூறுகின்ற கருத்தை இங்குப் புகழேந்தி, "மூலப்பழ மறைக்கு முன்னே காணலாம்" என்று எழுதினார்.

குறிப்பு:— 'தாமரை காணலாம்' என அன்வயம் ஆகும். அப்பொழுது தாமரையைக் காணலாம் என்பதுபொருள். ஆனால் ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபுதொக்கு இருக்கின்றது. ஆகையால் இரண்டாம் வேற்றுமைத் தொகை.

மறைக்கு காலிக்கு, என்னும் இரண்டு சொற்களும் கு விகுதி பெற்று எல்லைப் பொருளில் வந்திருக்கின்ற நான்காம் வேற்றுமைச் சொற்கள்.

"வேத முதலே" என்றதொடரில் வேதம்என்பது எந்தவேற்றுமைஅடைந்திருக்கின்றது? இதற்குவிடை நாம் அந்தத் தொடரிற்குப் படுத்துகின்ற பொருளைப் பொருந்தியிருக்கின்றது. வேங்தகளுக்கு முதல்வனே, என்று அதனை விரிக்கலாம். அப்பொழுது நான்காம் வேற்றுமை கு உருபுமாத்திரம் தொக்கு இருக்கின்றது அல்லவா? ஆகையால், நான்காம் வேற்றுமைத் தொகை என்போம். எனின், நான்காம் வேற்றுமைக்கு உள்ள பொருள்களில் இது இங்கு முறைப் பொருளில் வந்திருக்கின்றது (முதல் வால்யூம், 948 வது பக்கம்). அல்லது, வேதமுதலே என்னுமிதனை வேதங்களால் கூறப்படுகின்ற முதல்வனே, என்று விரித்தும் பொருள் கொள்ளலாம். அப்பொழுது அது, ஆல் உருபு தொக்கு இருக்கின்ற மூன்றாம் வேற்றுமைத் தொகையாகும். ஆனால், ஆல் உருபுமாத்திரம் தொக்கிருக்கவில்லை. 'வேதங்களால் முதல்வனே' என்று மாத்திரம் விரித்துவிட்டால் அர்த்தம் ஆகாது. வேதங்களால் குறிக்கப்படுகின்ற அல்லது கூறப்படுகின்ற, என்ற ஏதாவது ஒரு சொல்லும் சேர்த்துக் கொண்டால்தான் அர்த்தம் பூர்த்தியாகும். ஆகையால், உருபு மாத்திரமல்லாமல் வேறு அவசியமான ஒரு வார்த்தையும் தொக்கு இருக்குமானால் அந்தத் தொகைக்கு உருபும்பயனும் உடன்தொக்க தொகை, என்பது பெயர். இந்தத் தொகையைப்பற்றி முன் (முதல் வால்யூம், 729வது பக்கம்) கூறியிருக்கின்றோம் எனவே, வேதமுதலே என்பதை மூன்றாம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகையாகவும் கொள்ளலாம்.

முதலே என்பது அழைக்கின்ற பொருளில் இருப்பதால் எட்டாம் வேற்றுமை. யானை, என்பது அழைப்பதாகிய காரியத்தைச் செய்கின்றதாகையால் முதல் வேற்றுமை.

> போதுவார் நீறணிந்து பொய்யாத வைந்தெழுத்தை
> ஓதுவா ருள்ள மெனவுரைப்பார்—நீதியார்
> பெம்மா னமரர் பெருமா னொருமான்கை
> அம்மானின் றாடு மரங்கு

பதப்பிரிவு:-போது வார் நீறு அணிந்து பொய்யாத ஐந்து எழுத்தை ஓதுவார் உள்ளம் என உரைப்பார் நீதியார் பெம்மான் அமரர் பெருமான் ஒரு மான் கை அம்மான் நின்று ஆடும் அரங்கு.

அன்வயம்:—போது வார் நீறு அணிந்து பொய்யாத ஐந்து எழுத்தை ஓதுவார் உள்ளம்—நீதியார் பெம்மான் அமரர் பெருமான் ஒரு மான் கை அம்மான் நின்று ஆடும்—அரங்கு என (பெரியோர்) உரைப்பார்.

அல்லது.

நீதியார் பெம்மான் அமரர் பெருமான் ஒரு மான் கை அம்மான் நின்று ஆடும் அரங்கு—போதுவார் நீறணிந்து பொய்யாத ஐந்து எழுத்தை ஓதுவார்—உள்ளம் என (பெரியோர்) உரைப்பார்.

பதவுரை

போது - தாமரைபோல் விளங்கும் தம் முகத்தில்
வார் - நீண்ட இரேகையாக
நீறு - விபூதியை
அணிந்து - அணிந்து கொண்டு,
பொய்யாத - ஒருபோதும் தவறாத
ஐந்து - பஞ்சாக்ஷர மந்திரமாகிய ஐந்து
எழுத்தை - எழுத்துக்களை
ஓதுவார் - சொல்கின்றவர்களுடைய
உள்ளம் - மனமானது,
நீதியார் — நீதிமான்களாகிய தவசிகளுக்கு
பெம்மான் - பெருமானும்,
அமரர் - தேவர்களுக்கு
பெருமான் - தலைவனும்,
ஒரு - ஒப்பற்ற
மான் - மானை ஏந்திய
கை - கையை உடைய
அம்மான் - மகானும் ஆகிய அந்த நடராஜன்
நின்று - நின்று
ஆடும் - ஆடுகின்ற
அரங்கு - சபையாகும்
என - என்று
உரைப்பார் - (பெரியோர்) சொல்லுவார்.

விரிவுரை:— சிவபிரான், திருநீறணிந்து பஞ்சாக்ஷரம் செபித்துத் தன்பால் சிந்தை செலுத்துகின்ற பரம பக்தர்களுடைய மனதை விட்டகலாமல்ஆனந்த நர்த்தனம் செய்துகொண்டிருக்கின்றான் என்பதுஇச் செய்யுளின் கருத்து. புகழேந்திப் புலவர் முன்செய்யுளில் திருமாலைப் பாடி இச்செய்யுளில் சிவபிரானையும் பாடுகின்றார். இக்கடவுளர்களை மனதிற்கொண்டு அப்புலவர் பாடிய கலிங்கத்துக் காண்டத்தை நாமும் அவ்வாறே இனிப் படிப்போம்.

அப்பர்.

1. பிறப்பும் இளமையும்

(1) அப்பர் காலம்.

அப்பர் எந்தநூற்றாண்டில் அவதரித்தவரென்பது பெரியபுராணத்திலுங்கூட வெளியாகவில்லை. சேக்கிழார் புராணநடையை உற்று நோக்கின், அவர் தற்கால இலக்கிய ஆராய்ச்சியின் பதின்மடங்கு அதிகமான ஆராய்ச்சிகளை ஊக்கத்துடன் செய்தவராய்க் காணப்படுகிறார். ஆயினும் அவர் காலத்திலேயே சகாப்தம் இன்னதென்று காணாதிருப்பதாலும், திருநின்ற சருக்கத்தின் முதலிலும் முடிவிலும் புனைந்துரை போன்ற பாக்கள் † தான்கேட்டவாறு எழுதிய சரிதைக்குத் தான் உத்தரவாதியல்லரென்பது குறித்தமையாலும், அப்பர்காலம் (நிர்ணயிக்கும்)ஆராய்ச்சி, சேக்கிழார் காலத்திலும் மிகவும் கடினமான தென்பது விளங்குகின்றது.

அப்பர் காலம், புத்தமும் சமணமும் தென்னிந்தியாவில் அழிவுற்ற காலம் என்பதை அப்பர் தேவாரத்தில் சில இடங்களில் காணலாம் *. திருமங்கையாழ்வார் காலத்தவர் அப்பர் என்று சிலர் கூறுவார். ஆயினும் திருமங்கையாழ்வார் கால நிர்ணயமும் தற்கால ஆராய்ச்சியில் கடினமாகவே காணப்படுகின்றது. நமது மதசம்பந்தத்தைச் சற்றுமறந்து ஆராய்ச்சியில் புகுந்தால் நமக்குப் போதுமான ஆதரவுகள் கிடைக்கவில்லையென்றே வெளியிட வேண்டும்.

அப்பர்காலம், கடைச்சங்கத்தவர் [illegible] பன்னூற் பின்னரென்பர் [illegible] அப்பர் தேவாரத்திலும் அத்தாட்சிகள்உள. இவர் காலம் மாணிக்க வாசகருடைய காலத்திற்கு முன்னோ அல்லது பின்னோ என்பதையும் நிச்சயிக்கக் கூடவில்லை. மணிவாசகப்பெருமான் நம்மாழ்வார் காலத்தவரென்பது வீரபத்திரமுதலியார் † முதலானோர் துணிபு. ஆகையால் திருமங்கையாழ்வார் காலத்தவராய்க் கொள்ளப்படும் சம்பந்தர் அப்பர் இவர்கள், மாணிக்கவாசகர் காலத்திற்குப் பின் வந்தார்

---

†(i) திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டி னெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய வொண்ணுமை யுணாதேன்"
—திருநின்ற சருக்கம்—1.

(ii) "அடியெனே னுதரவா லாண்டவரசின் சரிதப்
படியானறிந்த படி பகர்ந்தேன்..."
—பெரிய புராணம்—

* (i) வாயி ருந்தமி ழேபடித் தாளுறு
ஆயி ரஞ்சம ணும்மழி வாக்கினன்
பாயி ரும்புன லாறை வடதளி
மேய வன்னென வல்வினை வீடுமே"
—திருவாறை வடதளி-திருக்குறுந் தொகை—9.

(ii) நீதியைக் கெட நின்றமணே யுனும்
சாதி யைக்கெடு மாசெய்த சங்கரன்
ஆதி யைப்பழை யாறைவ டதளிச்
சோதி யைத்தொழு வார்துயர் தீருமே"
—திருப்பழையாறை வடதளி-திருக்குறுந் தொகை—6.

† விருத்தப்பாவியல் நூலாசிரியர். சென்னை ஹைகோர்ட்டு வக்கீலாயிருந்து சுமார் 15 வருடங்களுக்குமுன் காலஞ் சென்றார். இவர் தமிழில் செய்த இலக்கிய ஆராய்ச்சிகள் மிகவும் அருமையானவை.

களென்பது அன்னோர் கொள்கை. மற்றும் சிலர் மாணிக்கவாசகர் மூவருக்கும் பின்வந்தவர் என்று கொள்வார். முறையே இக்கட்சிக்காரர்களின் ஆதரவுகளைச் சற்று ஆராய்வோம்:—

அப்பர்காலம் மாணிக்கவாசகர் காலத்திற்குப் பின்னரென்பதற்கு அத்தாட்சிகளாய்க் காட்டுவன:—

1 நரியைக் குதிரைசெய்வானும்'' * எனும்பாசுரம்.

2 சேக்கிழார் இரட்டுற மொழியும் (திருநின்ற சருக்கத்தில்) ஒருபதிகத்தில் திருநாவுக்கரசு நாயனர் திருவதிகையில் "ஈறின்றி யெழுந் திருவாசகமும், கையில்திகழும் உழைவாரமுடன்'' திருப்பணி செய்துவந்தனர் என்னும் கூற்று. §

3 மாணிக்கவாசகரைக் காட்டிலும், அப்பர் வடமொழிச்சொற்களை அதிகமாய்ப் பிரயோகித்திருப்பதால், தென்னாட்டில் ஆரிய சம்பந்தம் அதிகரித்த தன்மையுமாம்.

இம்மூன்று விடயங்களால், அப்பர்காலம்மாணிக்கவாசகர் காலத்திற்குப் பின்னரென்பது முதற் கட்சியாம். இக்கட்சியார் ஆதரவுகள் நம் மனச்சங்கை தவிர்க்கவில்லை. 1 நரியைக் குதிரைசெய்வானும்எனும் பாசுரம் வரும் "திருவாரூர்-பண்- காந்தாரம்'' என்னும் பதிகம் முற்றும், அப்பர் பாடியவாகா வென்பது பின்னால் காட்டப்பட்டிருக்கிறது. அவர் பாடியதாகக் கொள்வோமாகினும் "குதிரைச் சேவகனாகிய', திருவிளையாடல் மாணிக்கவாசகரைக் குறித்ததோ, ஏனைய திருவிளையாடலோஎன்பது துணிந்துரைக்கக் கூடவில்லை. 2 சேக்கிழார் கூறிய திருவாசகம் வாகீசர் திருப்பதிகங்களென்பதற்கும் பொருந்தும். 3. இதுகாறும் தேவாரங்களில் உள்ள பதங்கள் இத்துணை, திருவாசகத்திலுள்ளன இத்துணை, அவற்றின் முறையே காணப்படும் வடமொழிச் சொற்கள் இத்துணை, என்று எவரும் கணக்குக் கொடுத்தவரில்லை. சராசரியில் மாணிக்கவாசகர் நூல்களும் அப்பர் தேவாரமும் ஆராய்வோமாயின் அப்பர் பயின்ற வடமொழிகள் அதிகமாயினும், இது போதுமான அத்தாட்சி யாகாது.

திருஞானசம்பந்தரோ ‡ தான் பாடிய பாடல்கள் யாவும் தமிழ்மொழிகளாலேயே அமைந்தன வென்கின்றார். சம்பந்தரிலும் அதிக கல்வி பெற்றோரன்றி அவர்மொழியை மறுக்க யாவரா லாகும்?

இனி, இரண்டாவது கட்சியின் ஆதரவுகளை ஆராய்வோம்:—

1. மாணிக்கவாசகர் சுந்தரமூர்த்திநாயனர் பாடிய திருத்தொண்டத் தொகுதியில் காணமை.
2. திருமுறை தொகுத்தகாலை, தேவாரங்களுக்குப் பின் திருவாசகம் வைக்கப்பட்டமை.
3. சமணர், புத்தர்இவர்களைப்பற்றிய கண்டனைகள் தேவாரம்போல் திருவாசகத்தி லிராமை.
4. தேவாரகாலத்திய திருவிளையாடல்கள் திருவாசகத்தில் குறிப்பிட்டிருத்தல் §

இவ்வித ஆதரவுகளால் மாணிக்கவாசகர் தேவார காலத்திற்குப் பிற்பட்டவர் என்றும் கூறுவார். இவ்வாதங்களும் நம் மனச்சங்கை யொழிப்பனவாயில்லை. மேற்கண்ட ஆதரவுகளைப்பரிசோதிப்பின் ஒவ்வொன்றும் வலிவற்றனவாய் முடிகின்றது.

இனி, அப்பர் இருந்தகாலம் மாணிக்கவாசகருக்கு முன்னே பின்னே என்பதை விலக்கி, இந்துதேச சரித்திர ஒழுங்கில் எக்காலத்தவர் அப்பர் என்று ஆராய்வோம்:—

திருஞான சம்பந்தர் தம் பாடலாகிய "என்பொடு கொம்பொடாமை'' என்னும் அத்திருப் பாசுரத்தின் 3-வது அடியை நோக்குவோமானல், அக்காலத்தில் பரணிநட்சத்திரம் துருவ ஸ்தானத்தி லிருந்ததாகவும் உத்திரட்டாதி அங்ஙன மடையச் சுமார் 3000 வருடங்களா யிருக்கவேண்டு மென்றும் வீரபத்திர முதலியார் வற்புறுத்தினர். அங்ஙனம் ஆமோதிப்பது குருபாம்பரை பிரபாவத்தில் குறிக்கப்பட்ட திருமங்கையாழ்வார் காலத்திற்குச் சற்றேறக்குறையச் சரியாய் முடிகின்றது. திருநாவுக்கரசுநாயனர் கடைச்சங்கத்திய காலத்திற்குப்பிற்பட்டவர் என்றுரைப்பதுதகும்.

இது யாவராலும் ஆமோதிகப்பட்ட விஷயம். புத்தமதமும் சமண மதமும் தென்னிந்தியாவில் அழிந்த காலம், ஆரிய பாஷை இங்குப் பரவாததற்கு முன்னரென்றும் சங்கராசாரியார் முதலானோர் காலத்திற்கு முன்னென்றும் தமிழ்ப் புலவர் கூறுவர். சைவநாடாகிய தென்னிந்தியாவின் தமிழ்வேந்தர் ஆட்சியில் பௌத்தமும் சமணமும் பலகாலம் நிலைக்கவில்லை. மதவிரோதங்கள் ஏற்பட்டவுடன் சைவசமயத்தவர் பலத்தினால் இவ்விருமதங்களும் வேரற்று ஒழிந்தன. அம்மதங்களின் முதற் கொள்கையாகிய ஊனுண்ணாமையைச் சைவசமயம் ஆமோதிப்பினும் * அதை முத்திநெறிக்கு இன்றியமையாததென நஞ்சைவசமயாசாரிகள் மொழியவில்லை †. இவற்றை உற்றுநோக்கி இந்துதேச சரித்திராதிபர்கள் முடிவுகளைத் தழுவியும் கடைச் சங்கத்தார் காலம் கி. பி. முதல்நூற்றாண்டின் முதற்பாகமென்று சில வித்வசிரோமணிகள் ‡ அபிப்பிராயங்களைப் பற்றியும் நாம் அப்பர் காலம் நிர்ணயிப்போமானல், அப்பர் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் ¶ அவதரித்தன ரென்றே எண்ணல் வேண்டும்.

இவ்வநுமான முடிவே தமிழ் நூல்களில் ஆங்காங்கு அகப்பட்ட இந்துதேச சரித்திர விஷயங்களுக்கும், ஆரிய நூல்களில் காணப்படும் சிற்சில விஷயங்களுக்கும் பொருத்தமா யிருக்கின்றது. கரிகால் சோழன் காலத்தில் காவேரிக்குக் கரையேற்பட்டமையால் * பழங்காவிரி யென்றும் † காவிரி யென்றும் இரண்டு நதிகள், சங்கத்தார் காலத்திருந்த அரிசிலாறுடன் ஏற்பட்டன அவற்றைக் கூறுமிடத்துத் திருஞான சம்பந்தர் பழங்காவிரி நதியைக் காவிரி, அரிசில் நதிகளினின்று வேறுபடுத்திக் காட்டுவது போல் திருப்பாசுரங்கள் பாடியருளினர்.

இத்தன்மைய விஷயங்களால் நாம் அப்பர் கால நிர்ணயமின்றித் திருமுனைப் பாடி நாட்டிலே திருவாமூர் என்னுந் திவ்விய க்ஷேத்திரத்திலே அவதரித்தனர் எனக் கொள்வோம்.

---

* "நரியைக் குதிரை செய்வானும் நரகரைத் தேவு [செய்வானும்
விரதங் கொண்டாட வல்லானும் விச்சின்று நாறு [செய்வானும்
முரசதிர்ந்தானை முன்னோட முன்பணிந் தன்பர்க ளேத்த
வரவரைச் சாத்தி நின்றானு மாரூர மர்ந்த வம்மானே''
திருவாரூர்-பண்-காந்தாரம்—2

§ "மையற்றுறை யேறிம கிழ்ந்தலர் சீர்
வாகீசர் மனத்தொடு வாய்மையுடன்
மெய்யுற்ற திருப்பணி செய்பவராய்
விரவும்சிவ சின்னம்வி ளங்கிடவே
எய்துற்ற தியானம ருவுணர்வும்
ஈறின்றி யெழுந்திரு வாசகமும்
கையிற்றிக ழும்முழைவா ரமுடன்
கைத்தொண்டு கலந்துக சிந்தனரே''
திருநாவுக்கரசுநாயனர் புராணம்—77

‡ 1. கற்றுமுற்றி னர்தொழும் கழும்ம லத்தருந் தமிழ்
சிற்றுமுற்று மாயினன் அவன் பசர்ந்த சொற்களால்
பெற்ற மொன்று யர்த்தவன் பெருந்துருத்திபேணவே
குற்ற முற்று மின்மையில் குணங்கள் வந்து கூடுமே
—சம்பந்தர்—

2. வீழிம்மிழ லைமேவிய விகிர்தன்றனை விரைசேர்
காழிந்நகர் கலைஞானசம் பந்தன் தமிழ் பத்தும்
யாழின்னிசை வல்லார்சொலக் கேட்டாரவ ரெல்லாம்
ஊழின்மலி வினைபோயிட வுயர்வானடை வாரே.
—ஷை—

3. தேனமர் பொழிலணி சிறுகுடி மேவிய
மானமர் கரமுடை யீரே
மானமர் கரமுடை யீருமை வாழ்த்திய
ஞானசம் பந்தன தமிழே.
—ஷை—

§ (i) "தண்ணீர்ப் பந்தல் சயம் பெறவைத்து
நன்னீர்ச்சேவக னாகிய நன்மையும்"-(கீர்த்தி திருவகவல்)
(ii) "என்பொடு கொம்பொடாமை யிவைமார்பிலங்க
வெறுதேறி யேழை யுடனே
பொன்பொறி மத்த மாலை புனல்சூடி
வந்தெ னுளமே புகுந்த வதனால்
ஒன்பதோ டொன்றோ டேழு பதினெட்டொடாறு
முடனாய நாள்க ளவைதா
னன்பொடு நல்ல நல்ல வவைநல்ல நல்ல
வடியாரவற்கு மிகவே''
—வேயிறுதோளி—2

‡ மின்காட்டும் கொடிமருங்கி லுமையாட் கென்றும்
விருப்பவன் காண் பொருப்புவலி சிலைக்கை யோன் [காண்
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினோன்காண்
பொன் காட்டக் கடிக் கொன்றை மருங்கே நின்ற
புனற்கரந்தன் கை காட்டக் கண்டு வண்டு
தென்காட்டும் செழும்புறவிற் றிருப்புத் தூரில்
றிருத்தளியான் காணவனென் சிந்தையானே.
—திருப்புத்தூர்-திருத்தாண்டகம். 3

* நல்ல நினைப்பொழிய நாள்களி லாருயிரைக்
கொல்ல நினைப்பதுவும் குற்றமு மற்றொழிய
செல்வ வயற்கழனி தென்திரு வாரூர்புக்
கொல்லை மிதித்தடியேன் என்றுகொ லெல்துவதோ
—சுந்தரமூர்த்திநாயனர்

† i கான நாடு கலந்து திரியிலென் ?
ஈன மின்றி யிருந்தவம் செய்யிலென் ?
ஊனை யுண்ட லொழிந்து வானோக்கிலென் ?
ஞான னென்பவர்க் கன்றிநன் கில்லையே''
பாவநாசத் திருக்குறுந் தொகை 6—

ii ஊனிகந்தூ ணுறிகையர் குண்டர் பொல்லா
ஊத்தைவாய்ச் சமணருற வாகக் கொண்டு
ஞானகம்சேர்ந் துள்ளவயி ரத்தை நண்ணா
நாயேனைப் பொருளாக வாண்டு கொண்ட
மீனகஞ்சேர் வெள்ளநீர் விதியாற் சூடும்
வேந்தனே விண்ணவர்தம் பெருமான் மேக
வானகஞ்சேர் மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே
—திருமழபாடி திருத்தாண்டகம்

iii ஊனொ டுண்ட னன்றெனு ஊனொ டுண்ட றீதென
ஆன தொண்ட ரன்பினாற் பேசநின்ற தன்மையான்
வானொ டொன்று சூடினன் வாய்மையாக மன்னிநின்
றானொ டைந்து மாடினன் ஆனைக்காவு சேர்மினே''
—திருஞான சம்பந்தர்

‡ திருமணம் செல்வகேசவராய முதலியார் M. A. கனகசபைப்பிள்ளை முதலானோர் ஆராய்ச்சிகளை நோக்குக.

¶ பண்டுருட்டி ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே மட்சாலை மார்க்கமாய் ஐந்துமைலிலுள்ள திருத்தலூர் என்னும் திருத்துறை யூரிலிருந்து தெற்கே கரைமார்க்கத்தில் 6-மைல் தூரத்தில் திருநாவுக்கரசு நாயனர் திருவவதாரஸ்தலமாகிய திருவாமூர் உளது.

* (i)...... தலையே[illegible]
மண்கொண்டு பொன்னிக் கரைகட்ட வாரதாற்
கண்கொண்ட சென்னிக் கரிகாலன்.
—ஒட்டக்கூத்தன், குலோத்துங்க சோழன் உலா—

(ii) தொழுது மன்னரே கரைசெய் பொன்னியிற்
றொடா வந்திடா முகரி யைப்படத்
தெழுது கென்றுகண் டிதுமி [illegible]கக்கணென்
றிங்க ழிக்கவே யங்கழிந்ததும்.
(கலிங்கத்துப் பரணி 184.)

†(i) பன்னினார்மறை பாடினர் பாயசீர் பழங் காவிரித்
துன்னு தண்டுறை முன்னினர் தூநெறிபெறு வாரெனச்
சென்னி திங்களைப் பொங்கராக்கங்கை யோடுடன் சேர்த்தி
மின்னு பொன்புரி நூலினர் மேய தூவிள நகரதே [னர்
—திருஞான சம்பந்தர். (திருவிளநகர். 5)

(ii) இன்குர விசைகெழும் யாழ்முரலத்
தன்கர மருவிய சதுரனகர்
பொன்கரை பொரு பழங் காவிரியின்
தென்கரை மருவிய சிவபுரமே.
(ஷை திருச்சிவபுரம் பண்-வியாழக்குறிஞ்சி-1)

iii) தழை கொள் சந்து மகிலும் மயிற் பீலியுஞ் சாதியின்
பழகு முந்திப் புனங் பாய் பழங் காவிரித் தென்கரை
நழுவில் வானோர் தொழ நல்குசீர் ம[illegible] நாகேச்சரத்
தழகர் பாதந் தொழு[illegible]த்தவல் லார்க் கழ காகுமோ
—(ஷை-திருநாகேச்சரம், பண்-செவ்வழி-1.)

iv. குறவர்கொல்லைப் புன[illegible]ப் கொள்ளைகொண்டும் மணி [குலவுநீர்
பறதை யாலப் பாக்கும் பழங்காவிரித் தென்கரை
நறவ நாறும் பொழில் சூழ்ந்தழகிய நாகேச்சரத்
திறைவர் பாதந்தொழுதேத்தவல்லார்க்கிடரில்லையே
—ஷை 3.

V. வம்பு நாறும் மலரும் மலைப்பண்டமுங் கொண்டு நீர்
பைம்பொன் வாரிக் கொழிக்கும் பழங்காவிரித் [தென்கரை
நம்ப னாறு மமர்பன்ற நாகேச்சர நண்ணுவார்
உம்பர் வானோர் தொழச் சென்றுடனாவது முண்மை [யே—ஷை 5.

OFFICE OF THE RE... M

நமது சந்தா நேயர்கள் தமது சந்தா பணத்தை உடனே மணியார்டர் செய்து விடும்படி கேட்டுக்கொள்கின்றோம். இரண்டொரு வாரங்களுக்குள் அனுப்பாத பக்ஷத்தில், வி. பி. மூலம் நாங்கள் பெற்றுக் கொள்ளும்படி எதிர்பார்க்கின்றார்களென்று உணர்ந்து, மூன்றாவது வாரம் வி. பி. யில் அனுப்புவோம். மானேஜர்.

சந்திரை.

இது, ஆங்கிலப்புலமையால் ஆத்தான கவியாயிருந்த ஆல்ப்ரெட் டென்னிஸன் என்பார் எழுதிய
"Oenone" என்னுமோர் செய்யுணூல் கதையினை முதலாகக் கொண்டு வரையப்பெற் றிருக்கின்றதெனினும் தமி
ழின் மொழிக்கும் மரபிற்குந் தக்கவாறு கூடியவரையில் மாறிவர லாகின்றது.

வான்கடன் மேய்ந்த சூன்முதிர் மங்குல் மீன்
முடை யுணவை வெறுத்திட நினையா, கடிகமழ்
காவின் காய்கனிமேவிப் படியிடை யிறங்கப் பார்ப்
பன போன்று, மலைமுடி யெட்டிக் கைந்நிரை வாங்கிச்
சினை நுனி நின்றுஞ் சினை நுனி பற்றி, இருபுற மோங்
கிய பெருவரைச் சாரல் தருக்களி னூர்ந்து தவழா
விழிய; கைவினைப் பாயின் மலரொடு கஞன்று பைந்
நிறப் புல்லுந் தரையகம் படர; செடிபல பூத்தபூவின்
செல்வம் கடிதேன் நாறிக் கமழ்தல் செய்ய; உவதைச்
சிறுமி யோடையு மோடி நவமணி நான்ற வருவியும்
பாய்ந்து, புதுமலர் சூடிப் பொற்படி யாடி, மதுமடுத்
துண்ணுத் தான்புணர் மகிழ்நன் அலைகடல் நாடி, யத
டக் கல்லின் நிலையிலள் குதித்து விரையா நிற்க;
பனிபொழி காலைப் பகலோன் வரவே இனிதின் ஏற்
பான் ஒருதனி நின்ற பொன்முடிக் குன்றம் புவியி
னில் நிமிர; தன்னேர் கடந்த தனிப்பெருஞ் சிறப்
பின் விழியிமை கொள்ளா வெழிலமை சூழல் கழை
வளர் காட்டுக் குடகின் மலைவாய்,

கதிர்சுடு மமயந் தானே தமியள் திரிந்தன
ளொருத்தி சந்திரை யென்பாள். ஏமுறு மனத்தள்.
வயந்தன் துறக்க யாரு மிலாட்டி. பொலனிழ விழந்த
வள் கன்னம் மழுங்கிக் கவலுறு முகத்தள். சங்குறழ்
கழுத்தி லன்னு ளுள்ளம் எனவே பொங்கிப் புரண்ட
புரிசடைக் கூந்தல். இத்தகை நங்கை வல்லிப் புல்லிய
வான்துணர் கிளை வளையவிழ்கையிற் றூழ்வுற வேந்தி,
மலையும் விசும்பும் மாதிரங்களும் கரைந்துருகப்பெண்
கனிநின்றாள், மின்னென மறைந்த முன்னை யின்பம்
பன்முறை யெண்ணிக் குடபால் கதிரோன் இறங்கி
னன் சாய, மலைமுடி நீழல் மெல்லியல் தளிரடி வரு
டிப், "பாவாய், அழேல், நின்னேலம், யானே
பொறேன், நிற்றி நிற்றி" யெனுத் தொழுதல்காறும்,
சொல்லின சொல்லிப் பற்பல பன்னிப் பேதை
யிரங்கும்:—

"பொன்னி யன்னுப், வல்வினையேன் நின் மகள்
சந்திரை சாம். சாகும் முன்னே, அன்னுப் கேட்டி,
பொருந்தக் கேட்டி. இந்நண்பக லகவயின் கண்படுங்
குறிஞ்சி. வண்டுந் தேனும் ஞிமிறும் எல்லாம் வல்
லியூசற் புல்லிக் கிடக்கும். கல்லிடந் தோறும் தன்
னிழல் தழுவிப் பல்லியு முறங்க ஆடகப்புள்ளும்
அருஞ்சிறைக் கருவும் பொதும்பரூடே பாங்குறத்
தூங்கும். யானே, அன்னுய், கால்நடை கொண்
டேன், கண்பட லில்லேன்.

"பொன்னித்தாயே, புதுப்புனற் பாவாய், ஆரு
யிரன்னுய், நின் புன்விதிச் சந்திரை யுரைப்ப தொன்
றுண்டு. நிலமே கேட்டி. குன்றே, பைந்தலைப் பாந்
தள் பொங்கா தடங்குங் குகையே, காட்டி யாறு
காள், நீவிருங் கேட்டி.......திப்பியப் பொன்னி திரு
மகள் யானே......கேட்டி கேட்டி, இன்னுங்கேட்டி,
புகலக் கேண்மோ !

"எனதன்னுய், ஊற்றுப் பெருக்கானு முலகூட்டுங்
கவேரன்செல்வி,விளைந்ததுகேளாய். ஆண்டுமோரேழு
நாழிதோறு மூழியாய்க் கழிந்தும்போயது. குருதி
படர்ந்த வைகறைவானம் மறைப்பா னோங்கிய குவட்
டின் பாங்கர்த் தலைப்படுமிடத்தில் காத்துநின்றேன்.
சயிலச் சாரல் கல்படு மிடமெலாம் பனியிருள்
தோய்ந்தது. தழைத்துச் சூழ்ந்த மராமு மஃதே.
எழிலுடை யண்ணல், அன்னுய் அன்னுய், உள்ளமோ
கொடியன், வயந்தன்—கொற்கை மன்னன் குலத்
தவப் புதல்வன், தந்தையார் தேர்ந்துவைத்த தையலை
வதுவைகொள்ளுஞ் சிந்தைய்யா இல்லானுகிச் சீற்
றத்தால் பொங்கு மன்னுன் மைந்தனைத் தகைந்
தகற்ற, வளநகர் துறந்துசென்று வந்தனன் வரை
யைச் சேர்ந்தான், காடுறை வாழ்க்கை கொண்டான்.
என்னே சொல்வேன் அன்னுப் நின்பால்! என்றன்
நாணும் நிறையும் உயிரும் உணர்வும் அடியொடு
கவர்ந்த கள்வன்! முன்னுள் தந்த முத்தச் சுவையென்
மனப்பாலூறப் பின்னும் பருகி நொடிப்பேன் முன்
னர் வந்தனன் வயந்தன்.

"அன்னவன் உகைத்த பரிமா காண்மோ. நித்
திலக் குரத்தது, பால்நுரை யன்ன கால்பட வுலவுங்
கொய்யா வுளைக் கழுத்தது. வால்வெண் ணுலூகம்
நொய்தின்உகைத்துக், களகளவுகளும்ஓடையளைந்து,
நாணல் நீங்கிக் கருங்கடல் தயங்குங் கதிரின் கொழுந்
தெனத் தன்னேரில்லா வழுதிக்குரிசில் வருவானுக,

"அன்றே கழியினும் இன்றுமிப் பாவியேன்
கண்விட்டகலாக் கவின்மிகு காட்சி. அம்மாவோ,
நீங்கா வுயிரேன் நவில்வது கேட்டி ... .கழிபேரு
வகையள் கண்டேன். அண்ணலு நண்ண வாற்றுவின்
பம் ஆட்டத் துளங்கினேன். சேணிடைத் தாவுஞ்
செம்புன லருவியோ 'நின்முன் எதிர்வோன் நல்லா
னல்லன், நங்கா யவனைக் கைவிதிர்கொண்டு என்பால்
மீள்தி' என்னு வென்னைக் காரணவொலியால் விலக்
கியதேனும், யானே, செய்தீவினை யிருக்கச் செவி
தான் சிறிதுஞ் சாய்த்தில ளாகி வாராமுன்னம் வயந்
தன்தன்னைப் பரிந்து அழைப்பான் முற்பட்டேக,

"அன்னுப் அன்னுப், என்னே ! என்னே! புன்ன
கைத்தாது செவ்விதின் போக்கினன். யானும் படர்ந்
தேன். இவுளி யிழிந்து என்வயின் பாய்ந்தனன்
செம்மல். புலியத ளிலங்குந் தோளிற் றொங்கிப்
பனித்துளி படிந்ததால் பீலியிற் புரளுமவன் குஞ்
சியை வருடுவேன் என்னைத் தன்னுடல் புதைய மார்
புடன் திரட்டி நெருங்கப் புல்லுவான், பின்னும்
நானே புறமேயாவது பொருளுகிக் கையெதிர் நிறுவி
யென் நிறையும் நாணும் போன்றே உடலையுங் கண்
வழி பருக முயல்வோன் என்னு இமைத்திலன் நயக்
கக் கண்டு, பெற்றே னடங்க வினியிப் பெருமகனரு
ளென வீங்குவேன் கண்கள் பனிப்ப, வயந்தன் சித்
திரச்சிரிப்பால் செவ்வனஞ் சிரித்து, அமிழ்கமழாட
கக் கனியொன்று தாமரை நின்ற தடங்கையிற் காட்
டினுன்—காட்டக் கண்டேன், கூற்றென்றுணரேன்!

"உரைத்தனன் அன்னுன். என்னுருயிர்க்காதலி
சந்திரை, கேள். வில்லொடுவளைந்த திருநுதற்செல்வி,
மருந்தினு மினியாய், இக்கனியைக் காண்டி. அழ
கிற் சிறந்தவள் அடையும் பரிசில், என்னு விதன்மேல்
பொறித்துள பெற்றியு மோர்வாய். வாய்மையே
நோக்கின் நினக்கே இதுதான் உரியதுமாகும்.
மண்ணில மகளிர் கிடக்க, நீருறை தெய்வம், கானமர
ணங்கு அவ்வானே யியங்கும் விஞ்சையர் யார்
கொலோ நின்னிற் சிறந்த குழகைத் தாங்குநர்.
புணர்தரு புருவப் பேரெழில் மாதராய்.........'

"பின்னும் பகர்வான். பொன்னி யன்னுய்
உன்னி யுரைக்கேன், கேள் கேள். மறந்தது பெற்
றேன், கேள் —'இமயச் சாரலி னியக்கவேந்தன்
வகுத்தவொரு மன்றல் விழவிற்கு அழைத்திலன்
தன்னையென்னு அரம்பையென்பாள் செற்றந்தான்
சால மூள, விருந்தினரிடையே கலகம் விளைத்துத்
தன் வஞ்சினமுடிக்கக் கருத்துட்கொண்டா ளாகி,
மண்டபத்தகவயின் இம் மாடைப்பலத்தை மறை

யிடம்நின் றுருட்டிப்போக்கினள் போக்கிய கனியு
டன் பகையும் புகுந்தது. 'இந்நன்கனிக் குரியாள்
நானேயன்றே, நானேயன்றே! என்னு மாதரொடு
மாதர் மாறுபட் டிகலத் தீர்ப்போன் எவனென வின
வியகாலை, மூவேழுலகும் நல்லியாழ் பயில்தரு நாரதப்
பெரும்பேர் நற்றவ முனிவன், நெருநன்மாலை இக்
கனியைக் கொணர்ந்து என்கை வைத்து, 'வீறுடை
மங்கை யாரேயென்னு நீயே மதித்துத் தருதி' என்று
விதித்தவனேகினன். இன்றே வருவள் மேனகை,
உருப்பசியுந் திலோத்தமையுந் தெய்வக் கணிகையர்
அழகின் பரிசில் கனியிதற் கவாவி என்முன் வருவர்.
அந்தப்போழ்து நீயோ, சந்திரை, பாசடை மறைவிற்
றங்கி இப்பால் நிகழ்வன நோக்குதி. இமையோர்
தம்முள் உழக்கிய இவ்வழகின் வழக்கை யுனக்கே
யுரியன் வயந்தன் தீர்க்கும் பெருமைதான் நோக்க
இந்நாள் நனிநோற்றனை, சந்திரை,' என்று னன்றே.

"பொன்னியன்னுய், உயிர்ப்பொதி சுமக்கும்
உரவோ இல்லா நின்மகள் மாற்றம் முற்றக் கேட்டி—
அன்னதன் பின்னர்க் கண்புதைத் தோடியும்
தெண்ணீர் திளைத்தும் பூக்கொய் தணிந்தும்
பழப்பறித் துண்டும் பாடவுங் கேட்டும் கிளியொடு
பேசிக் குயிலொடு கூவி மயிலொடுமாடியும் அளி
யள் யானும் வயந்தன் தானும் அயரும் அமயம்
தினகர னெழவெழ நண்பக லாயது. பாதவ நிழ
லொரு பாறையி லமர்ந்தோம்யாமே. அந்நாள்காறும்
எம்முடன் சேர்ந்து ஓடவோடி ஆடவாடிக் குதித்துக்
களித்து, அமர்ந்தநேரம் தன் முகத்தினை நீட்டிக்
கைப்புற் கவாவு மிக் கோலக்கற்கி, இற்றைத்தினமோ
புல்லையுமறந்து தனியிடம் நின்று, துன்பம் நிலவிய
தோற்றத்தோடு, தயங்கல்கண்டு நிமித்தந் தன்னை
வினவுவேற்குத் 'தூக்கம்போலும்' என்று வயந்தன்
இயம்புங்காலை 'அந்தோ, வன்று' என்பது போன்று,
அவ்வறிமாகூடத் தன் கழுத்தினில் நான்ற சில்
லரிச் சதங்கையைத் துளக்கிக் கனைக்க, அம்மம்ம,
மயிர்பொடிக்க உடலம் விதிர்த்தேன்.........பகலைத்
தொலைக்கும் பேரொளியொன்று விசும்பினும்பர் வீசி
யதாக, 'வந்தனர்போலும் இந்திரன் மாதர்' என்னு
முன்னர்ப் பாசடையடர்ந்த பொதும்பரூடே புக்
கனள் ஒளித்தேன்.

"ஆயே, தாயே, ஆருயி ரன்னுய், நீயே கேட்டி
நிகழ்ந்தது மொழிவேன்—மயில்தனி லூர்ந்தா
ளுருப்பசி. தூவியன்னந் தாங்கத் தோன்றினள்
மேனகை. காற்றின் வ..தாள் மற்றக் காரிகை. தந்
தத்தாய பதுமையை யொப்பவர் வந்தனர் மூவர்.
அற்றங்காக்கு ஆடையுமின்றித் திகழ்தரு மேனியர்.
ஓவியன் உள்ளியுமறியா அன்னர் வடிவமும், குறு
நகை நிலவிய வயந்தன் செவ்வியும் என்னென்று
ரைக்கேன், ஆயே தாயே, என்னென் றுரைக்கேன்.
முல்லையு மல்லியும் புரிந்துடன் புணர்ந்தன. கோங்
கும் வேங்கையும் பிண்டியு மெல்லாம் சலசல
வொலித்தன. கொடிச்சியரிடித்த சுண்ணம் வண்டுணப்
பரந்த காற்றுக் கவிநய முணர்ந்தோர்தங்கள்
மனமெனக் கமழ்ந்தது. குவட்டினி லகவிய மஞ்ஞை
தழுவித் தண்ணென் னெழிலி தவழாநிற்க,

"புரூருவ வேந்தன் புலம்பிச் சோர வஞ்சிக்கொடி
யாய் வளர்ந்தாளந்த வஞ்சக்கணிகைவந்தெதிர்கூறும்:-
'அரசும் ஆட்சியும் நினதே யாக்குவென், வயந்த, எல்
லையு ளடங்காச் செல்வம் எல்லாம் நினதே. இறையுந்
திறையு மெத்திசையோரும் நின்கழல் குவிப்ப
இன்றே வகுப்பல். நீ இட்டது சட்டந் தொட்டது
பொன்னெனின், நின்கைநின்ற பொன்னின் கனியை
யென்கைத் தருதி', என்னுத் தாழ்ந்தனளாகிப் பின்
னும் பகர்வாள். 'ஆற்றலும் வெற்றியுமன்றே, வாழ்க்
கைக்கொத்த வரும்பெறற் பேறு! மாழையுளாய்,
மொய்யும் பெறுதி. கொற்றமும் மொய்ம்பும் அறி
விற் பிறந்து அறிவொடு பழகி அறிவனை யமர நோற்
றனை யாகு. ஓங்கிய செங்கோல் தீவகந்தோறும் செவ்
விதின் செல்லுமாப்பணிப்பென் கண்டாய். பொன்
னகர் வாழும் என்வரந் தந்தேன், இன்னுந் தாழேன்.
கோயிலினுதித்துங் காட்டிற்றிரியும் புன்வினைவயந்த,
எண்டிசை கறங்குந் திகிரி வேண்டாயோ? கூறுதி,
கொற்றக் குரிசில் புத்தேள் போல்குவர்.'

"பொன்னித் தாயே, உருப்பசி வனைந்த செஞ்
சொல் லோவியத்திகிரியுங் கவிகையுஞ் சிவிகையின்
தோற்றமும் நால்வகைச் சேனையும் கழல்படுமுடியும்
அண்ணல் வயந்தன் எண்ணங் கவர்ந்து கனியைப்
பகர்வான் கையைநீட்ட, நிகழ்வது மதித்துத் துனி
யுடனின்ற திலோத்தமை யாவாள் தகைந்தனள்
புகுந்து, "நில்நில் வயந்த மாற்றங் கேட்டி. தற்காப்
புந் தன்னறிவுந் தன்மதிப்பு மிவையன்றே புருடர்க்
குரிய வெற்றியுமாற்றலும்! இவைதாம் எய்தின்செல்வ
மும் ஆட்சியும் தாமே புகுந்து ஏவலிற் பொருந்தும்.
அசுர வலிமை ஆற்றலன்று. தருமம் வழாது மிடியு
மின்றி, அறமே நோக்கி அறத்தைச் செய்து, பயன்
தனை வெளவாப் பெருமன மன்றே அறிவின் துணிபு!
ஆதலின் மைந்த, மறுவிலைப் பகட்டால் நின்றன் பரி
சில் பெறுதற்கின்று எள்ளினென், கண்டாய். என
தாம் பொற்பு விலையள வளவெனும் பான்மைத்தன்று.
இவ்வெழில் நோக்கி ஓரஞ்சாரா நெறியினில் நின்றே
மதித்திடின், ஐய, என்னேரான திருத்தகு நல்லாள்
உளளெனும் பேச்சு நகைத்தற்கொத்த பித்தே
யாகும்.'

"கன்னியாறே, பொன்னித்தாயே, இன்னுங்
கேளாய்—திசைமுகன் வெஃகுந் திறத்த நல்லாள்
மற்றுஞ் சொல்லும், 'எனினும் வயந்த, தூசிலாத்
தெய்வத் திகழொளித் தோற்றம் நின் ஊனக் கண்
ணிற் காற்றுதாயின், ஐய—ஊதிய மில்லா நீதியு மில
தெனின்—வரமுந் தருவல். வயந்த, சலிப்பொடயர்
வும் இன்னலு மிழிவும் பொருந்தா தமைந்திடும் புந்
தியை நிற்கே யளிப்பல். உட்பகை வென்ற தனிப்
பேராற்றல் பெருமைக் கிறையாய்ப் பந்தப் பாசம்
புகுதல் இயலாவாழ்க்கை நினதேயாக. சாந்திசாந்தி,
இன்னும் ஏனே பரிசில் தாழ்தல்!

"திலோத்தமை நவின்றவித் திப்பிய வாக்கியம்
யானுங் கேட்டேன். நடுநிசிப் பூசைவேளைக் கோவி
லில் நின்று எங்கும் மணிகளின் நாதந்தன்னைத்
திளைத்த நல்லோரிதயம் பக்திப் பெருக்கொடு
பொங்குமாபோல் எளியேனுள்ளத் [illegible]னந்தவெ
ளம் பெருகப்பெருக, [illegible]க்கத்தனன் தாழ்ந்த
வயந்தனை நோக்கிக் கழறுவேன். 'ஏ, ஏ, வயந்த,
முதுக்குறை விதுவே. இவட்கே தருவாய், இவட்கே
தருவாய். பொற்கனிக்கீடாய் இவள்தரு வரமே என்
நற்றாய் வேண்டி யெனக்கிடு விலையுமாகும். பின்னர்ப்
பொருள்வயின் பிரிவும் ஓதற்பிரிவும் வேண்டவும்
வேண்டா ? அன்னுய், கேட்டிலன் கொல்லோ ! கேட்
டும் நேர்ந்திலன் கொல்லோ ! இன்னுவுடையேன்
என்னே செய்வேன்.

"மற்றவள் கொடியள், மேனகை நண்ணினள்.
ஆவின் பொருட்டு அடுபோர் தோற்று வனமேமேவிக்
கோசிகன் புரிந்த அலகில் தவத்தைக் கொள்ளை
கொண்ட கள்ளவாய்ச்சியள். வல்லியினெல்கி நெடு
மால் வலம்புரிச் சார்ங்கலச் சங்குள் கலைமகள் வரு
டிய மகரயாழ் இசைத்தென மிடற்றொலி தேர்ந்து
இனிதோ வீணு வின்சொல் லன்றே, ஐயகோ, தேர்ந்த
னள்.

"பொன்னித்தாயே, போகா வென்னுயிர் இன்றே
போகும். போகும் முன்னே, அன்னுய் கேட்டி,
பொருந்தக்கேட்டி—மார்பகம் புரண்ட வார்குழல்
விலக்கி வருவதுணர்ந்த புன்னகை கோட்டி, வயந்
தன் செவியுள் தீவாய்வைத்து, "நாவலந் தீவினி
லொப்புயர் வில்லாத் தனிப்பே ரழகள், செம்பியன்

மனைவி, அன்பினுமிக்காள், நின்தோள் சேரச் சாதித்திடுவேன்—நின்கைக் கனியை எனக்கே பகர்தி'' என்றனள் நக்காள். பரத்தையிவள் புலமைக்கு இளிவர நானும் நக்கேன். பிறன்மனை விழைந்த வயந்தப் பேயனே, பொன்னின் கனியொடு என்றன் உயிரும் உணர்வும் ஒருங்கேதிரட்டிச் சுட்ட கையினன் தழலைத்துறக்கும் விரைவினில் மேனகை கைக்குப் போக்கக் கண்டேன், பிறிதொன்றறியேன்- அன்றே தொட்டுத்தமியளாயினேன், அகலாதின்னும் நசையாலுழலு மென்னுவியோ அழியுங்காறுந் தமியளுமாவேன்.

"அன்னுய், அழகாமே!—அழகிய மனைவி! அழகளல்லளோ நான்! வயந்தக் கயவா, பலசா லென்னைப் புகழ்ந்தன யாவும் வஞ்சமே, தானே! நலம்புனைந்துரைத்த நின் சொற்பொழிவெல்லாம் இலக்கணவிதிக்கே இலக்குத்தானே! எளியளுஞ் சற்று அழகினளாதல் கூடவுங் கூடும். மற்று, முன்னுள் மாலைப் புலிப்போத்தொன்று பிறைமுன் வெள்ளி மிளர்ந்தவென எயிறுங்கண்ணு மிலங்கப்போந்து என்னெழிற் குடையா வாலைக் குழைத்து காலில் வீழ்ந்து பணிந்தது மேனே! அன்பினு மிக்காளோ அவள். ஆ ஆ! மலைவாழ் மள்ள, அன்பைத் தருவர் பிறர்பிறர், என்னையே தந்தேன் நினக்கு என்றுல்அவதியுமுண்டோ! நோவதெவன்! மேனகை கொடியாள், அவளினுங் கொடியாள் ஆதி அரம்பை.

"பொன்னியன்னுய், நின் சிறுவிதிச் சந்திரை உரைப்பது முடியும். "நின்னையே என்மனையாய் எழுபிறப்பும் பெறப்பெறுவேன்' என்றென்றோதி இப்பச்சை யிலைமுன் பச்சை மலைமேல் இப்பைங்கையதனில்எத்துணையளவுசத்தியஞ் செய்துமுத்தமுறியுமெழுதியுளன் அச்சோரன் வயந்தன். கரியாய்நின்று விசும்புச்செல்வி இந்நாள்கண்டு நடுங்கலை கொல்லோ! சான்று படுத்திய பூமித்திருவே, என்றன் பாரம் எவ்வாறு ஏந்துவாய்! உற்றது கண்டீ ருதவியுஞ் செய்வீர். கணக்கை மறந்த காலன்தன்னை என்வயின் சுட்டி ஆற்றுப்படுத்துமின்!.........அந்தகப் பெரும, உயிரைச் சுமக்கும் நசையொடு நடிப்போர் நாப்பண் நண்ணற்க. இன்னு உழக்க நின்னை விளிப்போர் மண்ணிடை யுள்ளோர் எண்ணே வில்லா, அவர்பாற் புகுதி. பயிற்சியுந் தருவல், என்னுழை வருதல் தாழவுந் தாழேல்.''

அகப்பொருள் வரலாறு.

காவற்பிரிவு.

இப்பிரிவு அரசனுகிய தலைமகனுக்கே உரியது. தன் நாட்டகத்து வாழுங்குடிகளில் மூத்தாரும், பெண்டிரும், பிணியாளரும், குருடரும், முடவரும் முதலாயினோர் தம்மூரினின்றும் வெளிச்சென்று தலைநகரையுற்று அரசனிடம் தங்குறைகளைக்கூறித் தீர்த்துக்கொள்ளல் இயலாதாதலின், அவருழைத் தானே சென்று அவர்க்குற்றதை வினவிப் பரிகரித்தல் செங்கோன் மன்னன் கடமையாதலின் அவ்வாறு முறைசெய்தற்பொருட்டும், காட்டகத்து வாழும் உயிர்ச்சாதிகள் ஒன்றையொன்று நலியாமலும் ஊர்ச்சனங்களை வருத்தாமலும் காத்தற்பொருட்டும், தேவாலயம், அறச்சாலை, ஊருணி, கழனிபாய்நதி முதலியவற்றை நேரிலாராய்ந்து பழுதுற்றவைகளைக் கண்டறிந்து செப்பனிட்டுச் சீர்படுத்திக் குடிகளுக்கு இதத்தைச் செய்யும்பொருட்டும், வளனில்வழி வளந்தோற்றுவித்தற் பொருட்டும், தன்குடிமக்கள் தன்னைக்கண்டு அகமகிழுமாறு காட்சிக்கெளியனுய் அவர்களுக்குத் தன்னுருவைக் காட்டுதற்பொருட்டும், மாற்றரசர் விடுத்த ஒற்றர்யாரேனும் தன்னுட்டின்கண் வந்துளராயின் அவர்க்குத் தனது ஊக்கத்தையும் அரசாட்சி முறைமையையும் காட்டும்பொருட்டும், அடிக்கடி நாட்டிடைச்சென்று சுற்றிப்பார்த்தல் நல்வேந்தன் தொழிலாம். இவற்றின் நிமித்தம் தனது இன்னுயிர்க்காதலியை விட்டுத் தலைமகன் பிரியநேரும் பிரிவு 'காவற் பிரிவு' எனப்படும்.

> அறப்புறங் காவல் நாடு காவலெனச்
> சிறப்புறு காவற் றிறமிரு வகைத்தே.

இங்கு 'அறப்புறம்' என்றது, தருமத்துக்குக் கல்வி கற்பிக்குமிடம், உணவளிக்குமிடம், பிணிக்கு மருந்துதவுமிடம் முதலிய தருமசாலைகளையும், அவற்றின் பரிபாலனத்தின்பொருட்டு இறையிலியாக (தீர்வையில்லாதனவாய்) அரசர்களால் விடப்பட்ட நிலங்களையும். இவை நன்னிலையில் இருந்தாலன்றி இத்தருமங்கள் செவ்வையாக நடைபெருவாதலின் இவற்றை நேரிற் பரிசோதித்துப்பார்த்தல் நீதி வேந்தனது கடமையாகும்.

பகைதணி வினைப்பிரிவு.

காவற் பிரிவினைப்போல இதுவும் அரசனுகிய தலைமகனுக்கேஉரியது. ஒருவரது உள்ளமிகுதியை ஒருவர் தணிக்கமாட்டாத இருபெரு வேந்தர் தம்முட்பகைத்து, இன்றுபொருதும் நாளைப்பொருது மென்று முரண்கொண்டு ஊக்கிநின்றநிலைமையில், அதையறிந்த தலைமகன் தான் அவ்விருவர்க்கும் ஒத்தநண்பனுதலானும், போரால்விளையும் அனர்த்தங்களையும், போர்மூண்டெதிர்ந்த மன்னர்தங் நாட்டிற்கேயன்றி அயல் நாடுகளுக்கும் ஏற்படக்கூடிய தீங்குகளையும் நன்குணர்ந்த அருண்மன்னனுதலானும், தான் சென்று அவ்விருவரையும் சந்துசெய்வித்துப் பகைதணிவித்துப் போரை விலக்குவலெனக்கருதிப் பிரிவான். இதுவே 'பகைதணி வினைப்பிரிவு' எனப்படும். இக்காரியம் ஒரோவொருகால் அந்தணராலும் பிறராலுஞ் செய்யப்படுமாயினும், திறலுடை வேந்தர்க்கே ஏற்றதென்னுஞ் சிறப்புநோக்கி இதைத் தலைமகன் செய்தியாக அகப்பொருணூலுடையார் கொண்டார் போலும். பார்ப்பாரும் இத்தௌத்தியத் தொழிற்குரியார் என்பதை,

> வயலைக் கொடியின் வாடிய மருங்குல்
> உயவ லூர்திப் பயலைப் பார்ப்பான்
> எல்லி வந்து நில்லாது புக்குச்
> சொல்லிய சொல்லோ சிலவே; அதற்கே
> ஏணியுஞ் சீப்பும் மாற்றி
> மாண்வினை யானையும் மணிகளைந் தனவே.

என்னும் புறப்பாட்டான் அறிக.

இது "தூதிற்பிரிவு" எனவும் படும்.

வேந்தர்க் குற்றுழிப் பிரிவு

வேந்தனொருவனுக்குப் பகைமன்னரால் இடுக்கண் உண்டாயவழி, அவனுல் வேண்டப்பட்டு அவனுக்கு உதவிபுரிந்து அவ்விடையூற்றைத் தீர்த்தற்பொருட்டு அவனது நண்பனுகிய மற்றொருவேந்தன் நேரே தான் போர்மேற் செல்லுதலுமுண்டு; அன்றித் தனக்குட்பட்ட குறுநிலமன்னர் அல்லது படைத்தலைவர்களில் ஒருவனை அனுப்பலுமுண்டு. ஆதலின் இவ்வினைமேற் செல்பவன் இவர்தம்முள் யாவனுயினும் இப்பிரிவிற்குரிய தலைமகனுவான். இது 'துணைவயிற்பிரிவு' எனவும் வழங்கப்பெறும்

இம்மூவகைப் பிரிவின்கண்ணும் தான் சேணகன்று நெடுநாள் பிரிந்திருக்க நேருமாகையால் அத்துணையும் தன்னைப்பிரிந்து தனித்துவைகத் தலைமகள் ஆற்றுளென அறிந்த தலைமகன் தன்செலவைத் தானே அவளுக் குணர்த்தத்துணியாது, பாங்கியைக் கொண்டு குறிப்பாலுணர்வித்து மெல்ல நீங்குவான்.

தலைமகன் செய்யக்கருதிச் சென்ற காரியத்தின் பெருநலத்தைநோக்கிச் சிலநாள் தலைமகள் ஒருவாறு பிரிவாற்றி இருந்தாளேனும், காலம் நீடிக்கநீடிக்க அவள்உள்ளமுடைந்து மிகவும் வருந்துவாளாயினுள்.

> மெழுகினுற் புனைந்த பாவை வெந்தழ லுற்ரு லென்ன
> அழுதுநைந் துருகு கின்ற ஆயிழை தன்னைத் துன்னிக்
> கெழீஇய அன்பிற் ரோழி கிளைநரம் பனைய சொல்லால்
> கழிபெருங் கவலை நீக்கக் கட்டுரை இனைய சொன்னுள்.

> ஓடரி யொழுகி நீண்ட ஒளிமலர் நெடுங்க ணுரைக்
> கூடரி உழுவை போல முயக்கிடைக் குழையப் புல்லி
> ஆடவர் அழுந்தி வீழ்ந்தும் பிரிவிடை அழுங்கல் செல்லார்.
> பீடழிந் துருகும் பெண்ணிற் பேதையர் இல்லை' என்ருள்.

> தேன்சென்ற நெறியுந் தெண்ணீர்ச் சிறுதிரை யாற்றி னூடு
> மீன்சென்ற நெறியும் போல விழியினிற் புலப்ப டாது,
> மான்சென்றநோக்கின் மாதே, மாய்ந்துபோ மக்கள் யாக்கை
> ஊன்சென்று தேயச் சிந்தித் துகுவது தகுவ தன்ருல் §

§ இச் செய்யுள்களின் பொருள்:—

மெழுகினுல் செய்த பெண்பிரதிமை வெந்தீயில் பட்டாற்போல அழுது அழுது தளர்ந்து உருகுகின்ற தலைமகளை அன்பு பொருந்திய தோழிநெருங்கி, அவளது மிகுந்த கவலையை நீக்கும்பொருட்டு யாழ்நரம்பின் ஓசைபோன்ற தன் சொற்களால் இவ்வாசகங்களை உரைத்தாள்.

பரந்து படர்கின்ற இரேகைகள் நீண்ட ஒளி பொருந்திய தாமரை மலர்போன்ற கண்களையுடைய மாதரை மணக்கும் ஆடவர் தம் பிணைவைக் கூடுஞ் சிங்கத்தையும் புலியையும் போலக் கூடுங்காலத்தில் அன்பாரத் தழுவி இன்பத்தில் அழுந்திக்கிடப்பாரேனும், அவர்களைப் பிரியுங் காலத்தில்வருந்தமாட்டார். அப்படிக்கன்றிப் பிரிவாற்ருது, தம் பெருமையழிந்து உருகுகின்ற பெண்களைப்போன்ற பேதையர் பிறர் இல்லை, என்ருள்.

அழகினுல் மானையுங்கடந்த கண்ணுடையமாதே, வானத்திலே வண்டுகள் பறக்கும் வழியைப்போலவும், தெள்ளிய நீரையுடைய சிறிய அலைபுரளும் ஆற்றில் மீன் செல்லும் வழியைப்போலவும் கண்ணிற்குப் புலப்படாமல் மக்களது தேகம்போனவிடந்தெரியாமல் அழிந்துபோய்விடும். ஆகையால் இவ்வியல்பினதாகிய உடல் தேய்ந்து போகும்படி நீ உன் நாயகனை நினைத்துத் தளர்வது தகுதியன்று.

> அன்பினி னவலித் தாற்ரு தழுவது மெளிது; மற்றும்
> என்பினின் ருவி நீங்க இறுவது மெளிது; நேர்ந்த
> துன்பினுக் குடைந்தி டாது துகைத்தவத் துன்பந் தாங்கி
> இன்பமென் றிருத்தல் யார்க்கும் அரியதிவ்வுலகில்.' என்ருள்

> இளமையின் மூப்பும் செல்வத் திடும்பையும் நோயில் காலை
> விளைதரு நோயும் போல விழைவுறு புணர்ச்சிப் போழ்திற்
> கிளைநரிற்பிரிவும் நேரும். கெண்டைவேல் வென்றகண்ணுய்
> களைதுயர்; அவலம் வேண்டா; காதலர் மீள்வ ரின்னே

> முத்திலங் காகந் தோய்ந்த மொய்ம்மலர்த் தாரி னங்கோன்
> கைத்தலத் தகன்ற பந்திற் கைப்படுந் தானே மீண்டு.
> தத்தரிக் கண்ணுந் தோளும் தாமிடந் துடிப்ப; பாங்கர்
> ஒத்திசைக் கின்ற பல்லி; ஒன்றுநீ கவல வேண்டா.

என்று பாங்கிதேற்றப் பின்னுஞ்சிலநாள்ஆற்றியிருந்த தலைமகள் தன் காதலர் மீளாமைகண்டு பாசறைக்கண் பாணனைத் தூதுவிடுப்பக் கருதி அவனை அழைத்து, "தாம் பிரிந்து சேணிடைச் செல்லத் துணையின்றி நான் தனித்திருந்த சமயம்பார்த்து உருவிலாளி என் மீது போர்மூண் டெழுந்து இடைவிடாது பூவாளி பொழிந்து நலிகின்ருன். இங்குடன்மீண்டு இப் போர்விலக்கி என்னுயிர் காவாது அன்னியர்க்காக அங்கே அமராற்றிநிற்றல் அறனன்றெனக்கூறி, அவரை அழைத்துவா'' என்று விடுத்தாள். 189036

அவ்வாறே சென்று பாசறைக்கண் வினைமுடிந்து ஊர்க்குத் திரும்ப ஆயத்தமாயிருந்த தலைமகனைக் கண்டு வணங்கிநின்ற பாணனை அவன்

> சேதா வனமுலைச் செவ்வழி யாழ்கொண்டு, சேரிவிட்டுப்
> போதாத பாணரெப் போதுவந்தீர்? புலவுண் பருந்து
> மீதாடு பாசறை வாய்வினை யேனுக்கு வேனெடுங்கண்
> சூதார் வனமுல்லைத் தோகையென் ஞேவின்று சொல்லி
> [யதே

என்ன வினவினன். அதற்குப் பாணன்,

> திருவடி வீழ்ந்திறை வர்தந் திருச்செவி சேர்த்திடென
> பருவர லெம்பெரு மாட்டி பகர்ந்தது பற்றலரைப்
> பொருதிகல் வென்ற புனைமணித் தேரும் புரவலரும்
> வருவது கண்டு மகிழ்வதென் ருேவென்னும் வாசகமே

என்றும், தாம்வருவதாகக் குறித்துச்சென்ற பருவம் வந்தணுகவும் உம்மை வரக்[illegible] ...கர்ணுது,

அன்பினுலே புலம்பிப் பொறுக்கமாட்டாமல் அழுவதும் எளிது. பின், உடலிலிருந்து உயிர்நீங்கும்படி சோர்வதும் எளிது. ஆனுல் விளைந்த துன்பத்திற்குத் தோற்காமல் வருத்தும் அத்துன்பத்தைத் தாங்கி இன்பமே என்று இருத்தல் இவ்வுலகில் யாருக்கும் அரிதாம்.

இளமையிலே முதுமையும், செல்வத்திலே தரித்திரமும், நோயில்லாத காலத்தில் நோயும்போல், ஆசையுடன் அன்பரோடு கூடிவாழ்கின்ற காலத்தில் ஒவ்வொரு சமயம் பிரிவும் நேருவது இயல்பே. ஆதலால், கெண்டைமீனையும் வேலாயுதத்தையும் வென்ற கண்களை யுடையவளே, உன் துயரை நீக்கு. புலம்பாதே. உன்காதலர் இப்பொழுதே மீண்டு வருவார்.

முத்துமாலை ஒளிர்கின்ற உன் மார்பைஅணைத்த மலரடர்ந்த மாலையணிந்த நம் தலைவர், கையைவிட் டகன்ற பந்தைப்போல் தாமே திரும்பி வந்து சேர்வார். செவ்வரி படர்ந்த என் கண்ணுந் தோளும் இடப்புறம் துடிக்கின்றன. நலல் நிமித்தமான இடத்திலே பொருந்திப் பல்லியும் நற்சகுனம் கூறுகின்றது. இனிச் சிறிதும் நீ கவலைப்பட வேண்டா.

தணியாரோ யுழுந்தானுத் தகையவள் தகைபெற
அணிகிளர் நெடுந்திண்டேர் அயர்மதி; பணிபுநின்
காமர் கழலடி சேரா
நாமஞ்சால் தெவ்வரின் நடுங்கினள் பெரிதே. §

என்றுஞ் சொல்லக்கேட்ட தலைமகன், உடனே தேர்ப்பாகனைக்கூவிச் "செங்கயலோடு சிலையுங் கொண்டு செவ்வாய் நற்றேடிலங்கு திருமுகமொன்று இன்று தோன்றியது. இனி ஊர்க்குத் திரும்ப விரைந்து தேரைப் பண்ணுக" என்று பணிப்ப, அவ்வாறே வந்த தேர்மீதேறி மீண்டான். விரைந்து மீண்டு நெடுநாட்பிரிந்த தன்இன்னுயிர்க்காதலியைக் கூடி அவன் இன்புற்று மகிழ்ந் தினிதிருந்தான்.

§ தீர்த்தற்கரிய காமநோயால் வருந்தி அமையாத தன்மையளாகிய நின்காதலி, உன்னுடைய விரும்பத்தக்க கழல்களை அணிந்த பாதங்களைப் பணிந்தடையாத, அச்ச மிகக்கொண்ட பகைவரைப்போல, நடுங்கினள். அவள் (இழந்த) அழகை (மீளப்) பெறும்படி உனது அழகு விளங்கிய உயர்ந்த தேரைச் செலுத்துவாயாக.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

10. மிதிலைக் காட்சிப் படலம்.

இன்பத்திலே யின்பம் தேன்சோற் கவியின்பம்.

கோசிகமுனிவனோடே கூடி மிதிலைமாநகரினூடு சென்ற தசரதகுமாரர்கள்இன்புறக் கண்டுநின்ற இடங்கள் பற்பல. இசைபயில்சாலைகளும் நாடகமேடைகளும் நறுமலர்ச்சோலைகளும் மங்கையர்விரும்பியாடும் வாவிகளும், புயங்களிற் கலவைச் சாந்தும் புணர்முலைச்சுவடும் நீங்கா வயங்கெழிற் குமரர் வாளாட்டமாடும்வெளிகளும் ஆவணங்களும் அங்கங்கு நோக்கி மகிழ்ந்தனர். இவைகளை வருணிக்கின்ற செய்யுள்கள் தம்முடைய ஓசையின் மென்மையினால் சுவையைச் சித்திரித்துத் தருமாறு அமைந்திருக்கின்றன.

வள்ளுகிர்த் தளிர்க்கை நோவ மாடகம் பற்றி வார்ந்த
கள்ளென நரம்பு வீக்கிக் கண்ணொடு மனமுங் கூட்டி
வெள்ளிய முறுவல்தோன்ற விருந்தென மகளிரீய்ந்த [ரூர்.
தெள்விளிப் பாணித் தீந்தேன் செவிமடுத் தினிது சென்

[முறுக்காணிகளைப்பற்றி ஒழுகும் தேனின் தாரை போன்ற நரம்புகளைத் தம் கூரிய நகங்கள்வாய்ந்த தளிர்போன்ற கைகள் நோகும்படி வலித்துச் சுருதி சேர்த்து, தாம் பாடும் பாடல்களின் பொருளை மனதில் அனுபவித்து, அவ்வாறு அனுபவிப்பது அவர் கண்களில் தோன்றவும், இளநகை அரும்பியதால் பல்லொளி சிறிது விளங்கவும் மாதர் விருந்தாக அளித்த தெள்விளி என்னும் இராகத்தில் அமைந்த பாட்டாகிய மதுரம் பொருந்திய தேனை இராம இலக்குமணர்களும் முனிவரும் செவியார உண்டு மகிழ்ந்து சென்றார்]

பாடலிதுவாயின் ஆடலருமையைக் கம்பர் அமைத்துப் பாடிய பாசுரந் தானே நம் மனதரங்கினில் நிர்த்தனஞ் செய்யா நிற்கின்றது:—

நெய்திர ணரம்பிற் றந்த மழலையி னியன்ற பாடல்
தைவரு மகர வீணை தண்ணுமை தழுவித் தூங்கக்
கைவழி நயனஞ் செல்லக் கண்வழி மனமுஞ் செல்ல
வையநுண் ணிடையா ராடு நாடக வரங்கு கண்டார்.

[நெய்பூசியநரம்பிலிருந்து வருகின்றநாதம்போன்ற இனிய குரலில் மழலைச்சொற்க ளமைந்த பாடல், வருடப்படுகின்ற மகரவீணையோடும் மத்தளத்தோடும் பொருந்திக் கலந்துதூங்கவும், அவர் அபிநயிக்கின்ற கையைத் தொடர்ந்து கண்கள் புரளவும், அக் கண்களைத் தொடர்ந்து தம் மனம் செல்லவும், உண்டோ இல்லையோ வென்ற சந்தேகத்திற்கு இடமான இடுப்பையுடைய நடனமாதர் ஆடுகின்ற நாடகமேடைகளை இம்மூவரும் கண்டனர்]

குரலொலியும் வீணையின் நாதமும் மத்தளத்தின் ஓசையும் ஒன்றோடொன்று நெய்ததுபோல் பெருந்தி அமைகின்றவோர் தன்மையை, அவை தழுவித் தூங்கின, என்று உரைப்பதல்லால் வேறெவ்வகையினும் விளக்குவதியலாது. இச்செய்யுளை ஓதுமளவிலேயே கவிநயமுணர்ந்தோர் கண்கள் செருகும்.

சோலைகள்சில செல்வோர் கண்களுக்குத் தென்பட்டன. அங்கு,

பாகொக் குஞ்சொற் பைங்கிளி யோடும் பலபேசி
மாகத் தும்பர் மங்கையர் நாண மலர்கொய்யும்
தோகைக் கொம்பி னன்னவர்க் கன்ன நடைதோற்றுப்
போகக் கண்டு வண்டின மார்க்கும் பொழில் கண்டார்.

[பச்சைக் கிளியோடும் தம் பாகையொத்த இனிய சொற்களால் பல பேசிக்கொண்டு, தேவலோகக் கன்னிகையரும் நாணும்படி மலர்பறிக்கின்ற மயிலும் பூங்கொம்பும் போன்ற மாதர்களுக்கு அன்னம் நடையில்தோற்று வெட்கத்துடன் போகக்கண்ட வண்டுகள் பரிகசத்தால் ஆரவாரம் செய்கின்ற சோலையைக் கண்டார்]

அத்தகைய பொழிலின்கண் மற்றோரிடத்தில்,

பூசலி னெழுந்த வண்டு மருங்கினுக் கிரங்கிப் பொங்க
மாசறு பிறவி போல வருவது போவ தாகிக்
காசறு பவளச் செங்காய் மரகதக் கமுகு பூண்ட
ஊசலின் மகளிர் மைந்தர் சிந்தையோ டுலவக் கண்டார்.

[மாசுமறுவில்லாப் பவளம் போன்ற சிவந்த குலைகளோடுங்கூடிய மரகதத் தூண்போன்ற பாக்குமரங்களில் கட்டிய ஊஞ்சலில், குற்றமுள்ள பிறவியைப் போல் போவதும் வருவதும் ஆகி—இடையின் ஆற்றாமைக்காக இரங்கி ஒன்றோடொன்று சண்டை செய்தெழுந்த வண்டுகள் ஒலிக்க—மகளிரும் மைந்தரும் மனம் பொருந்தி ஆடக்கண்டார்]

ஊசலாடு மாதராள் கூந்தலணிந்த பூவின் மதுவுண்ண வந்த வண்டு, அம்மலர்மீது இறங்குந் தருணத்தில் நூலென்ன நுடங்கும் அவள் நுண்ணிடையை நோக்கித் தன்னுடைய பாரமும் சேருமாயின் அவ்விடை தளர்ந்து ஒடியும் என உணர்ந்து எழுகின்றபோது, இம்மலரானது தன்னின்று கமழ்கின்ற மணமெனுந் தூதினால் அழைக்கப்பெற்று

வரும் பிற வண்டுகளைக் கண்டு, முன்வந்த வண்டு அவை இவள் இடையின் தன்மையை ஓராது உட்கார்ந்து விட்டால் என்செய்வதென்று துணுக்கமெய்திக் காரணமும் சொல்லத்தரியாது விரைவுடன் விலக்க, அவை, தானே தேனத்தனையும் பருகவேண்டுமெனும் பேராசையால் தம்மை இது தடுக்கின்றதென நினைத்துப் பூசலிட, பிறகு உண்மையைத் தேரும் அமயம் பின்னும் சில வண்டுகள் புதியவாய் வர இவையெல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்து அவைகளைக் கடிவதால், இம்மாதின் தலைக்குமேல் வண்டின் பூசல் விளைந்து பொங்குமொரு செய்தி இப்பாசுரத்தின் முதலடியால் புனையப் பெற்றிருக்கின்றது. இன்னபடி வண்டுகளுங்கண் டிரங்கும்படி வணங்கியன வனிதையர் மருங்கு லெனும் கருத்தைக் கம்பர்,

கணங்கெழு கலாவமொளி காலும கல்குற்
சுணங்கெழு தடத்துணை முலைச்சுமை யிடத்தாய்
வணங்கியு நுணங்கியும் வருந்திய மருங்கிற்
கிணங்கு துணையாய்ஞி மிறிரங்கின வெழுந்தே

[அரைப்பட்டி கைத்தொகுதியின் ஒளிபரவிய அகன்ற அல்குலிற்கும், சுணங்குபடர்கின்ற பருத்த இரு முலைகளின் பாரத்திற்கும் இடையாயிருந்து, வளைந்தும் துவண்டும் வருந்திய இடுப்பினிற்குப் பொருந்திய நட்பாகி வண்டுகள் இரங்கி எழுந்தன]

எனவரும் சூளாமணிச் செய்யுளில் தோலாமொழித் தேவரிடம் கற்றிருக்கலாம். இச்செய்யுளின் ஈற்றடியினின்று வண்டுகள் இரங்கும் செம்திறை இங்கெடுத்தாண்ட கம்பர் முன்னிரண்டடிகள் குறித்த அவ்விடையின் இருக்கையை நினைவிற் காத்துவைத்திருந்து பின் ஆரணிய காண்டத்தில் மாரீசன்வதைப் படலத்தில்,

புடைகொண் டெழுகொங் கையுமல்குலும் புல்கி நிற்கும்
இடைகண் டிலமல் லதெல்லா வுருவுந் தெரிந்தாம்

என உபயோகப்படுத்திக் கொள்கின்றனர். சந்தத் தழகினும் அணிகளின் புதுமையினும் மனோபாவக் கொள்ளையினும் இருபெருந் தேவர்களாலாக்கிய இரு பெருமணிகளும் கம்பரின் நூலும் ஒத்தொளிர்கின்றன. எனினும், நாடக நவிற்சியினும், மாநுட இயற்கையைக் கையாளுந் திறத்தினும், தனக்கேயுரிய சில தத்துவங்களின் புதுமையாலும் ஆழத்தாலும் கம்பர்பிரான் தோலாமொழித் தேவருக்கும் திருத்தக்க தேவருக்கும் இடையே சற்றுநிமிர்ந்து நிற்கின்றனரென்றே எண்ணுவாரு முளர்.

இன்னபல இனிய காட்சிகளைக் கண்ணுற்றவாறு மிதிலாநகரின்கண் நடந்துசென்ற இராமனும் மற்ற இருவரும் ஜனகவேந்தனது அரண்மனையருகு நண்ணினர். வேறெங்குங் கண்டுகண்டு சென்றவர் இங்கு மாத்திரம் கண்டு அயல் நிற்கும்படி நேர்ந்தது. அவ்வாறு அவர் நின்றதையும், நிற்பதற்குக் காரணமாயிருந்த காட்சியையும் கம்பர்,

பொன்னின் சோதி போதினினாற்றம் பொலிவேபோல்
தென்னுண் டேனிற்றீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்
கன்னிம் மாடத் தும்பரின் மாடே கழிபேடோ
டன்னம் மாடு முன்றுறை கண்டங் கயனின்றார்.

[பொன்னினது ஒளியும் மலரினது மணமும் உண்கின்ற தேனினது மதுரமான சுவையும், பொன்னுக்கும் மலருக்கும் தேனுக்கும் இயற்கையாய் அமைந்து பொலிவதுபோலச் செவ்விய தென்மொழியாகிய தமிழ்க்கவியில் பொலியும் இன்பமேஇவள் எனத்தகைய சீதையைக் கன்னிமாட மேலிடத்தின்கண், அன்பு மிகுந்த பெண் அன்னத்தோடு ஆணன்னம் ஆடியிருந்த முற்றத்திற் கண்டு, அங்கு இம்மூவரும் அயல் நின்றார்]

என்னும் பாசுரத்தில் பாராட்டுகின்றனர். சீதாபிராட்டியின் தனிப்பேரழகின் பெருமையையும் தென்மொழிக் கவியின் அருமையையும் ஒருங்கே உய்த்துணரவல்லார் கம்பர்திறம் யாரே உளர். ஆதலின் காட்சி தருகின்ற இச்சனகன் கன்னியைத் தமிழ்க்கவி யின்பத்தின் உருவமேயெனத் தனதுள்ளம் பொலிய அறிமுகப்படுத்துகின்றனர். செவ்விய மதுரஞ்சேர்ந்த நற்பொருளில் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய கவிஞர் என இவர் நகரப்படலத்தின் முதற்செய்யுளில் குறிகொண்ட தமிழின் தனியழகு மீண்டு மிங்குச் சீதையோடு சேர்ந்து சிறப்பெய்தியது. இணையதென்று விளம்புதற்கு இயலாவகை உரை கடந்ததாய், உணர்ந்தோருள்ளம் புனிதமாக மேன்மேலு மின்பம்பெருகுந் தன்மையில் தமிழ்க் கவியும் சனகன்மாமகளும் வேற்றுமையின்றிவிளங்கும் சீதையால் செந்தமிழும் செந்தமிழால் சீதையும்இங்குமாறி மாறிச் சிறப்பெய்தக் காண்கின்றோம்.

தென் என்னுஞ்சொல்லைத் தேன்என்பதின் குறுக்கல் விகாரமாகக் கொள்ளாமல் சொல்லிற்குச் சிறப்படைமொழியாய்ச்சேர்த்து அக்கவியின்பத்தைச்சீதாபிராட்டிக்கு உருவகம் என்று ஏற்று, நகர்வலம் வருமிம்மூவரும்முதற்பார்வையில் மாடத்தின்கண் அக்கன்னியையே இன்புறக் கண்டனர், என்னுமிப் பொருள் இச்செய்யுளிற்கு இயைந்ததாகும். இராமன் கன்னிமாட முன்துறையில் அன்னங்கள் ஆடும் அழகைக் கண்டு நின்றிருந்தானென்றும், பிறகு சீதாபிராட்டி அங்கு வந்தாளென்றும் எண்ணும்படி பின்வரும் பாசுரங்கள் சிறிதும் அமைந்தில. இதற்கு அடுத்த செய்யுளிலிருந்தே கம்பர் தன் கண்முன் கண்ட காட்சியை வருணிப்பவர்போல் சீதையினதழகைப்புகழத்தொடங்கி விடுகின்றார். முப்பதாவது செய்யுளில், "பொன்னேசூழப் பூவிஞெதுங்கிச் சிதகும் [illegible] என்பதும் அவளங்குடா [illegible] டியதை [illegible] சொல்வதேயன்றி உள்ளிருந்து வருவதைச் சொல்வதாகாதென்றே முன்னும் பின்னும் இருக்கின்ற செய்யுள்களைக்கொண்டு கருதவேண்டியிருக்கின்றது. இது வன்றி, இராமன் இம்முதற்காட்சியைத் தன் கண் விட்டகலாமல் காத்துவைத்திருந்து இருபானைந் தாண்டுகளுக்கப்பால் அநுமனை நாடவிட்டபோது அடையாளம் உரைப்பானாகி.

முன்னைநான் முனியொடு முதியநீர் மிதிலைவாய்ச்
சென்னிநீண் மாலையான் வேள்விகா ணியசெல
அன்னமா டுறையுளக் கருகுநின் றாளையக்
கன்னிமா டத்திடைக் கண்டதுங் கழறுவாய்

[முன்னே நான் விச்வாமித்திர முனியோடு நீர்வளம் மிகுந்த மிதிலையில், சென்னியில் நீண்ட மாலையணிந்த ஜனகனதுவேள்வியைக்காணும் பொருட்டுச் செல்ல, அப்பொழுது அன்னங்கள் ஆடுகின்றஇடத்திற்கு அருகே நின்றவளை அந்தக் கன்னிமாடத்தில் கண்டதையும் சொல்வாய்]

எனத்தன் மனத்தரங்கிலே மீண்டுமோர் முறை அழைக்குங் காலையினும் நின்றாளைத் தான் காண்பானே யல்லாது வந்தாளையன்று.

இவ்வடையாளத்தில் இராமனுக்கும் சீதைக்கும் இடையே நிகழ்ந்த சங்கேதம் அன்னத்தின் செய்தியுள் அடங்கி யிருக்கின்றது. இராமன் இன்று பார்த்துநின்றது அன்னம் ஆடுகின்ற அழகையன்று. ஆனல், அன்னமங்கு ஆடியிராதாயின் அவனுக்கங்கு அயல் நிற்பதும் அரிதாகியிருக்கும். மாடத்தில்நின்ற வொரு பெண்ணை நோக்கியவண்ணமாக வீதியில் தயங்குவது ஓர் இளவலிற்குத் தகவன்று. எனின், வேறெதையோ பாற்பதுபோல் பாவித்துச் சற்றங்கே தாழ்ந்திருக்க நிபம் ஒன்று இன்றியமையாததாம். கழிபேடோ டாடு மன்னம் இங்கு இவ்விராமனுக்கு அவ்வகையோர் நிபமே உதவிய பெருமையைப் பெற்றதல்லாது அவன் கண்களைக் கவருந் தரத்ததென்று நினைக்கவேண்டா.

இவ்விதம், காதலர் காட்சிக்கு நினையா உதவிகள் அன்னங்கள் புரிகின்றசெவ்வியைக் கம்பர் சிலப்பதிகாரத்தினின்றெடுத்துத் தனதாக்கிக் கொண்டனரோ வென்னும்படி

அன்னந் துணையோ டாடக் கண்டு
நென்ன ஞேக்கி நின்ரு ரொருவர்
நென்ன ஞேக்கி நின்ரு ரவர்நம்
பொன்னேர் சுணங்கிற் போவா ரல்லர்

[அன்னம் தன் துணையோடு ஆடுவதைக் கண்டவராய், நேற்று (என்னை) நோக்கி நின்ருர் ஒருவர். நேற்று (என்னை இவ்விதம்) நோக்கி நின்றஅவர் நம்முடைய (முலையில் தோன்றி மறைகின்றதாகிய) பொன் போன்ற சுணங்கைப்போல்(தோன்றிமறைந்து) போய் விடுகின்றவரல்லர்—(வருவார்).

என்று கானல்வரியில் மாதவியின் மாற்றமாக ஒரு செய்யுள் நிகழக் காணலாம். இச்செய்யுளின் தொனியும் அதன் உட்குறிப்பும், 'கழிபேடோ டன்னம் ஆடும் முன்துறைகண்டு அங்கயல்நின்ருர்' என்னும் கம்பரடியில், சில சொற்களுடனுங் கூடக் கலந்துலவுகின்றது. ஓதிமத்துதவியென்றுங் காதலார் உவந்து கொள்வார்.

தென்மொழிக் கவியின்பம்போல் நின்ருனை இராமனுடன் கண்ணுற்றகம்பர், அவளது அழகிற்குத் தன் உள்ளத்தை அளித்துவிட்டுத் தன்னுடலெங்கும் இன்பந் துளும்ப வற்றசொற்களால் காட்சிதந்த அச்சீதையைப் புகழப் புகுவோராகி, அவர் உணர்வெதெல்லாம் உரைக்கமாட்டாது சொற்கள் பின்னிடக்கண்டு, அது தன் கல்வியின் குறையன்றென

செப்புங் காலைச் செங்கம லத்தோன் முதல்யாரும்.
எப்பெண் பாலுங் கொண்டுவ மிப்போ ருவமிக்கும்
அப்பெண் டானே யாயின போதிங் கயல்வேருர்
ஒப்பெங் கேகொண் டெவ்வகை நாடி யுரைசெய்வோம்.

[சொல்லப்போனல், சிவந்த தாமரையில் வசிக்கின்ற பிரம்மன் முதல் யாவரும், எந்தப் பெண்ணினுடைய சிறப்பை உவமையால் சிறப்பிக்க வேண்டுமானுலும், அப்படி உவமையாய் அமைகின்ற இலக்குமியே,இவளாயிருக்க, இவளுக்கும் ஒப்புவேறெங்கு நாம் தேடி உரைசெய்யக் கூடும்]

என்று தன்னையே தேற்றிக் கொண்டார். 'உரைசெய்வோம்'என்றது, கவிகளுக்குரிய பன்மையைப்பாராட்டிக் கொண்டதுமல்லாமல் இராமனோடு கம்பர் தான் சேர்ந்து சீதையைக் காண்பதுபோன்றே நாம் அவரோடு சேர்ந்து பார்ப்பதாகப் பாவித்து அவளழகை வியந்து நம்மையும் உளப்படுத்தி அளவளாவும் கருத்தையும் தருகின்றது.

உவமையும் ஒப்பும் உரைக்காவிடின் என்! உற்ற அழகைஉரைக்கலாமேஎனின்—ஆம்,முற்றமுணர்ந்தபின் அன்ருே ஒன்றினை உணர்த்தல் கூடும்! இவளழகையோ முடியக் காண்பதென்பது அரிதாகி இருக்கின்றது. பார்த்துக்கொண்டேவரும்பொழுது இமைகொட்டி அக்காட்சியின் தொடர்பை இடையறுத்து விடுகின்றதால் மீண்டும் மீண்டும் அடியைப்பிடித்து அவளழகைப் பார்த்துக்கொண்டுபோவதும் இடையே இமைக்கின்ற கண்கள் அத்தொடர்ச்சியைக் கலைத்து விடுகின்றதுமாய் முடிகின்றதேயல்லாது, இடையருதவளழகை நெடுநேரம்நோக்கி முடிவெய்துதற் காற்ருமாநுடர் யாம் என் செய்வோம்' எனப் பரிவாரோடு கம்பரும் பரிந்து, மற்றுக் "கண்ணிமையாத் தேவராய்ப் பிறந்திருப்போமாயின் இந் நல்லாள் அழகின் கரையைக் காண்போமன்ருே!"என்று எவரேனும் இரங்குவாராயின், அவர்களுக்கும், "நம்ப, இக்கரைக்கு அக்கரைபச்சை....அவ்விண்ணவர் செய்தியுரைக்கின்றேன் கேள்...சொல்லன்றிக் கண்ணுங் கடந்த காரிகை இவள்"என்பவராய்,

உமையா ளொக்கு மங்கைய ருச்சிக் கரம்வைக்கும்
கமையாண் மேனி கண்டவர் காட்சிக் கரைகாணர்
இமையா நாட்டம் பெற்றில மென்ரு ரிருகண்ணல்
அமையா தென்ரு ரந்தர வானத் தவரெல்லாம்.

[பார்வதி தேவிக்கும் நிகரான மாதர்களும் தம்தலைமேல் கைவைத்து வியக்கும் பொறுமை மிகு இவள் மேனியினழகைக் கண்டுகண்டு காட்சியின் கரையைக் காணுதவராகி இமையாத கண்களைப் பெற்றிலமே என்று ஏங்கினர். ஆனல், இமையாத கண்ணுடைய அந்த மேலுலகத்தில் வாழும் தேவர்களெல்லாருமோ இரண்டு கண்களால் கொட்டாது பார்த்தலும் இவளழகை முடியக்காணல் இயலாது என்றுகூறுவார்]

என எடுத்துக் காட்டுவார். சீதையைச் சிறப்பிக்க வந்த கம்பர், உமையாளொக்கும் மங்கையரும் இவளைக் காணத் தம் சிரமேல் கைவைத்துக் கும்பிடுவரென்றேனுட், அல்லது வியப்பரென்றேனும் இயம்பி அப்பார்வதியை ஒருபடி குறைத்தாரென்று குறைகூர்வார் உளராயின், அன்னர் மனம் அமைதியுற இவ்வடிகளுக்குப் பொருள்காணல் அரியதன்று. 'ஒக்கும்' என்னுஞ்சொல்லை முற்ருகக் கொண்டு, 'உமையாளை ஒப்பாள்' என்று முடித்துக் கொள்ளலாம். ஆயின், 'அயல் வேருர் ஒப்பு எங்கே கொண்டு எவ்வகைநாடி உரைசெய்வோம்' என்று முன் இயம்பியதை "உரைப்பின், உமையாளையே இவள் ஒப்பாள் எனலாம்; மற்றமங்கையர் உச்சிக்கரம் வைப்பர்" என விரைந்து திருத்தியதாகத் தோன்றும். உவமிக்கப்படும் பொருளைக் காட்டிலும் உவமை எப்பொழுதும் சிறந்ததாதலால், உமையைக் காக்கப்போய்ச் சீதையைத் தாழ்த்தியதாமென நினைக்க நேருமாயின், உமையாள் என்பதற்கு மருத்துவ அகராதியின்படி தோகை என்ற அர்த்தம் இருப்பதால் அப்பொருள் கொண்டு ஆகுபெயராய், 'மயில்போன்ற சாயலுடைய மாதரும் உச்சிக்கரம் வைக்கும்' என்று உரைகாண அமையும்.

இனி, 'இருகண்ணலமையாதென்ரு ரந்தரவானத்தவர் எல்லாம்' என்றிருப்பதால், இரண்டு கண்ணிற்கு

அதிகமான கண்களுடைய விண்ணவர்களையும் உபலக்கணமாக் கொண்டு அவர்களும் அமையாதென்ற தன்மையைப் பலபட உரைக்கப் புகலாம். இமையா நாட்டம் இரண்டே உடைய அமரரெல்லாம் சீதை மேனியின் காட்சிக்குக் கரைகாணுது, மூன்று கண்ணுடைய அண்ணலை அடுத்து,"நீரேனும்கண்டு எமக்குக் கூறும்" என்றுவேண்ட அவர், "மற்றைக் கண் திறத்தற் கொத்ததன்றென் றறியீரோ வமரர்காள்," என அவர்களையும் அழைத்துக் கொண்டு நயனமோரெட்டுடைய பிரம்ம தேவனை அண்மிக் கேட்க அவரும், "திசைக்கொரு முகமுடைய யான் கண்ணெட்டுங் கொண்டு ஒன்றையுங்காணலியலா" தெனவிளக்கி அவரோடு அறுமுகக் குமரனை நண்ணி வினவியகாலைப், "பன்னிரு நயனங்கள் போதுமோ, வருமின், ஆயிரம் கண்ணுடைய இந்திரனையே கேட்போம்" எனமுருகனும் உடனேகி இந்திரனைக் கேட்க அவன், "என்னைப் பரிகசிக்கவோ வந்துளீர். எண்ணுதற்குக் கண்ணுயிரமானுலும் காணுங்கண் ஓரிரண்டே...... ஈராயிரங் கண்களுடையவனும் அறிவிற் சிறந்தவனும் இச்சீதைக்கு அண்மியனுய் நெடுநாள் பழகியவனுமான ஆதிசேடனைக் கேட்பதல்லால் நமக்குக் கதி வேறு இல்லை" என்றபின் அனைவரும் அவ்வாதிசேடனையுற்றுத் தாம் வந்த கருமத்தைக்கூற அப்பாம்பின் பெருந்தகை, "நெடுநாள் என் ஆயிரத்தோடு ஆயிரமாய கண்களைக்கொண்டு எமதன்னையை நோக்கியுளேன், உண்மையே. ஆயினும், கரைகண் டிருப்பேனேல் என் கழுத்தை நிமிர்ந்திரேனே...இன்னுமேன் கவிந்திருக்கின்றேன்!...பிடரும் நோகின்றது. எனினும் காட்சி முற்றியதில்லை. ஈதறியாது என்பால் வந்தீரே" என்று ஆயிரம் வாய்களாலும் நக்கான்—இது, கம்பருமன்று, கவிநயமுமன்று—"காலக்ஷேபம், காலக்ஷேபம்!"

காங்கிரஸ்

1928-ம் வருஷத்திய காங்கிரஸ் டிசம்பர் மாதம் 29ந்தேதி யன்று கல்கத்தாவில் தேசபந்து நரகில் அமைக்கப்பட்ட கொட்டகையில் கூடிற்று. இந்தியாவின் பலபாகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர். இவ்வருஷம் ஸ்ரீ டெஜ்பகதூர் சாப்ரு,சிந்தாமணி முதலிய மிதவாதிகளும், சுயேச்சைக் கட்சியினரும் வந்திருந்தனர். காங்கிரஸ்தலைவர் மஹாநாட்டுப்பந்தலினுள்ளே வந்ததும் உபசரணைக் கமிட்டித் தலைவரான ஸ்ரீமான் சென்குப்த்தா அவரை வரவேற்ருர். உபசரணைத்தலைவர் பின் கூறியதாவது :—

" நாட்டில் ஏற்பட்டிருக்கும் எல்லாக்கட்சியினரின் ஒற்றுமையை வளர்க்கவும், இந்தியர் அனைவோரும் ஒன்று சேர்ந்து முன்னேற்ற வேலையைத் துவக்கவும், எல்லாக்கட்சியினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நேருகமிட்டி அறிக்கையை மஹா நாட்டார் ஏற்றுக் கொண்டு அதை நடத்துவதற்கான வழியில் முயலவேண்டும். இச்சமயம் சிறிய அபிப்பிராய பேதங்காரணமாக ஒற்றுமை குலையின் நமது அடிமைத்தனம் போகாது. முழுவிடுதலை பெறுவதில் எனக்கும் சம்மதமே. என்ருலும் காலதேச வர்த்தமானத்திற்கு இயன்றவாறு நாம் வினை செய்யவேண்டும்.

இம்முன்னுரையுடன் ஸ்ரீசென்குப்த்தா ஸ்ரீமோட்டிலால் நேருவைத் தலைமைவகித்துக் காங்கிரஸை நடத்திவைக்குமாறு கேட்டுக்கொண்டார். கரகோஷத்திற்கிடையே எழுந்து,தலைவர், ஸ்ரீலஜபதிராய் இறந்ததைப்பற்றியும், வேறு சிலர் இறந்ததைப்பற்றியும் வருந்துவதாகக் கூறி அவர் செய்த பிரசங்கத்தின் சுருக்கம் வருமாறு :—

" இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் என்னை இரண்டா முறையாகக் காங்கிரஸில் தலைமைவகிக்குமாறு பணித்ததற்கு எனது வந்தனத்தை உங்களுக்கு அளிக்கின்றேன். காலத்தின் நிலையையும் நாம் செய்ய வேண்டிய வேலையையும் பற்றி ஒருமுடிவிற்கு வர, ஒவ்வொரு இந்தியனும், " அரசியல் போராட்டத்தில் நாம் வகிக்கும் இடம் எது ? நாம் பெறவேண்டியது என்ன? எப்படி அதைப்பெறுவது?" என்று கேட்டுக் கொள்ளவேண்டும்.

முதற் கேள்வியை எடுத்துக்கொண்டு ஆய்வோம். இந்தியருக்குள் இருக்கும் ஒற்றுமையும், அரசாங்கத்திற்கும் நமக்கும் இருக்கும் சம்பந்தத்தையும் முதன் முதலாக நாம் ஆராயின் முதற்கேள்வியின் விடையை எய்தப்பெறுவோம். பிரிட்டிஷ்இராஜதந்திரிகள் தந்த வாக்கெல்லாம் வார்த்தையே யாயின. இப்பொழுது இந்திய அரசியல் திருத்த விசாரணைசபை ஒன்றை, நம்மைக்கலவாதும், நமது கூட்டுறவை நாடாதும் அனுப்பியுள்ளனர். சமீபத்தில் லாகூரிலும் மற்றவிடங்களிலும், சைமன் கமிஷன் பகிஷ்கார இயக்கத்தில் அதிகாரிகளின் தண்டந்தின் வன்மையையும், உடைந்த இந்தியர் தலையையும் பார்த்தோம். இதிலிருந்து புலனுவதென்ன? பொதுஜனஅபிப்பிராயத்தை மதித்து அதிகாரிகள் வினைசெய்ய நினைக்கவில்லை என்று தெரியவில்லையா ? ஆகவே, நமது அரசியல், பொருளாதாரம் கைத்தொழில், [illegible] வர்த்தகமுயற்சிக்கும் [illegible] பிராயச்சித்தம் [illegible] கள் என்பது நிச[illegible]. நம் கையேதான் நமக்குத் துணையாகவேண்டும். நம்முள்ளும் ஒற்றுமையில்லை. மதப்போர்ஒருபக்கம், வகுப்புப்போர் மறுபக்கம் நம்மை வலியற்றவர்களாய்ச் செய்துவருகின்றன. அரசியலையும்,மதத்தையும் சேர்த்துப் பேசுதலை விடுத்துவிடவேண்டும். இப்பொழுது மதம்என்பது ஆன்மவளர்ச்சிக்குத் துணை செய்வதற்குப் பதிலாகப் பூசலையும் பிளவையும் வளர்த்து வருகின்றது. அயலான் ஒருவனேடு எதிர்த்து நிற்க நம்மிடை ஒற்றுமை அவசியம். ஆகவே மதப்பூசலை விடுக்க வேண்டும்.

இனி இரண்டாவதான கேள்வியைப் பார்ப்போம். நாம் வேண்டுவது எவ்விதத்தளையுமில்லாத சுதந்திரம். சென்னை காங்கிரஸ் இந்தியாவின் நோக்கம் முழுவிடுதலை என்று கூறிவிட்டது. அதை மறுப்பவர் யாருமிலர். நான் வேண்டுவது முழு விடுதலைதான். என்ருலும் குடியேற்ற நாட்டுரிமை என்பதை நான் மறக்கமாட்டேன். குடியேற்ற நாட்டுரிமை நமக்கு வேண்டும் உரிமையெல்லாம் அளித்து விடும். குடியேற்ற நாட்டார் பெற்றுள உரிமையை நாமும் பெற்ருல் சுதந்திரம் பெற்றவர்களாவோம். காந்தி அடிகள்

கள் கூறியபடி பிரிட்டிஷாரின் சம்பந்தத்திலிருந்து விலகவேண்டுமென்ற அவசியமில்லை. அப்படிச் செய்ப நேரிடின் அதற்கு அவர்களே காரணமா யிருக்கவேண்டும். ஆகவே எல்லாக் கட்சியாராலும் ஒரு மனமாய் ஏற்கப்பட்ட எனது அறிக்கையை மஹாநாடு ஏற்றல் நலமாகும். ஒரு பெரிய காரியங்ளைச் சாதிக்க வேண்டியபோது வார்த்தைச்சண்டையிட்டால் ஒன்றும் நடவாது.

நமது நோக்கத்தைப் பற்றிக் கூறிவிட்டேன். நமது நோக்கத்தை நிர்ணயித்துக்கொண்டு பின்னர், அந் நோக்கத்தைப் பெறுதற்குத் திட்டம் ஒன்றைத் தயார் செய்து கொள்ளவேண்டும். பின்னர் அத்திட்டத்தின் படி வேலை துவக்கவேண்டும். நாம் செய்யவேண்டிய முக்கிய வேலைகள்:—

வகுப்புச் சண்டையை ஒழித்தல். இந்து முகமதிய மனஸ்தாபம் ஏற்படாது பார்த்துக்கொள்ளல் அதற்கானபடி பிரசாரம் செய்தல்.

தாழ்ந்த வகுப்பினரை முன்னுக்குக் கொண்டுவரல். தீண்டாமையை ஒழிக்க முயலல்.

விவசாயிகளின் முன்னேற்றத்திற்கும், தொழிலாளிகளின் முன்னேற்றத்திற்கும் சங்கங்களை ஏற்படுத்தி அவரவர்க்கான சௌகிரியங்களைச் செய்து வைத்தல். கைத்தொழில் வர்த்தகம் வளரச் செய்தல்.

கிராமங்களைச் சீர்த்தல். கிராமங்களில் சங்கங்களை ஏற்படுத்திப் பிரசாரம் செய்தல். கதர் இயக்கத்தை வளர்த்தல். கிராமங்களில் ஜனங்களை நூல்நூற்கச் செய்தல்.

பெண்கல்விக்கும், அவர்கள் விடுதலைக்கும் பாடுபடுதல். கள்ளுக்குடியை நிறுத்தும்படி ஜனங்களைத் தூண்டுதல். ஜனங்களிடம் அரசியல் விஷயங்களைப் பரப்பி வைத்தல்.

இவைபோன்ற பலவேலையைக் காங்கிரஸ் மஹாநாடு செய்தல் வேண்டும். இவ்வருடம் காங்கிரஸ் நமது அரசியல் வேலை தீவிரமாய் நடப்பதற்கான முறையைச் செய்யுமென்று எதிர்பார்க்கின்றேன்.

தலைவர் உரைமுடிந்ததும் ஸப்ஜக்ட் கமிட்டியில் காந்தி அடிகள் எல்லோரோடும் கலந்து செய்த தீர்மானத்தைப் பிரேரேபித்தார். 1929-ம் வருஷம்வரை நாம் தாழ்ந்திருந்து, அதற்குள் குடியேற்ற நாட்டுரிமை கிடைவில்லையாயின் முழு விடுதலைபெற வரிகொடா இயக்கத்தைத் துவக்கிவிடுவது என்பது தீர்மானம். நேரு அறிக்கைக்காரர்களுக்கும், விடுதலைக்காரர்களுக்கும் ஏற்பட்ட அபிப்பிராயபேதங்காரணமாகக் காந்தி அடிகள் இந்த மத்தியஸ்தத்தைச் செய்தார். இதற்குமுன் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் 1930 வருஷம் வரை குடியேற்ற நாட்டுரிமை கேட்பதென்றும், பிரிட்டிஷ் பார்லிமெண்டார் அதற்கு இசையாவிடின் 1931ஆம் வருஷம் முழு விடுதலையே காங்கிரஸின் நோக்கம் என்று மாற்றிவிடுவதென்றும் காந்தி அடிகள் சேய்த முடிவை ஸ்ரீமான் ஜவஹரிலால் நேருவும், ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ ஐயங்காரும் ஏற்கவில்லை. ஆகவே காந்தி அடிகள் 1929-ம் வருஷத்திற்குள் குடியேற்ற நாட்டுரிமை கிடைக்காவிடில் முழுவிடுதலைபெற வரிகொடா இயக்கத்தைத் தொடுப்பது என்று மாற்றினர். முழுவிடுதலைக்காரர் இதை ஒருவாறு ஏற்றனர். இத்தீர்மானத்தைக் காந்தி அடிகள் நீண்டதோர் பிரசங்கத்தைச் செய்து பிரரேபித்தார் ஸ்ரீமதி பெஸண்டு அம்மையாரும், ஸ்ரீமான் மாளவியாவும் இதை எதிர்த்தனர். ஒற்றுமையைக் கெடுத்தல் கூடாதென்று மாளவியா வற்புறுத்தினர். அன்னிபெஸண்டம்மையார் படைக்கலங்களும், அதைக் கையாளும் திறனுமிலாத காலை முழுவிடுதலை பொருந்தாது என்றுகூறி மஹாநாட்டை விட்டு வெளியேசென்றார். தீர்மானம் ஓட்டிற்கு விடப்பட 118 பேர் சாதகமாகவும் 45 பேர் பாதகமாகவும் ஓட்டுக் கொடுத்தனர். தீர்மானம் நிறை வேறியது.

தீர்மானங்கள்.

காங்கிரஸ் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள் வருமாறு:—

ஸ்ரீ லாலாலஜபதிராய், ஹக்கீம் அஜ்மல்கான், லார்ட் சின்ஹா, மகன்லால் காந்தி, கோபந்துதாஸ், கோபால கிருஷ்ணையா முதலிய பெரியோர்கள் மரணத்தைக் குறித்து மஹா நாடு வருந்துகின்றது.

தலைவர் ஸ்ரீ மோட்டிலால்நேரு இதைப் பிரேரேபிக்க எல்லோரும் ஏகமனதாய் ஏற்றனர்.

இந்திய முன்னேற்றத்திற்கு, ஏழைத் தொழிலாளர்களும், குடியானவர்களும், கைத்தொழிலாளரும் மூலாதாரமாவதால் அன்னவர் துணையைப்பெற, இயக்கங்களை ஸ்தாபித்தல் அவசியம். அவர்கள் மேன்மையோடு இருந்து வருவதற்குரிய நலங்களைப் அவர் பெறுமாறு செய்யவேண்டும். பொருளாதார அபிவிர்த்தி அவர்களிடம் ஏற்படும் வகையில் காங்கிரஸ் முயலவேண்டும். இத்தீர்மானத்தை ஜவஹரிலால் நேரு கொண்டு வந்தார் எல்லோரும் ஏகமனதாய் ஏற்றனர்.

'இந்தியருக்கு எந்த நாட்டினுடனும் மனஸ்தாபம் இல்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்தார், கையாளும், இராணுவ முறையை இந்திய ஜனங்கள் அங்கீகரிக்கவில்லை?' என்ற தீர்மானத்தை டாக்டர் அன்சாரி பிரேரேபித்தார். எல்லோரும் ஏற்றனர்.

'இந்தியர் எவரும் அரசாங்கத்தார் நடத்தும்விழாக்களுக்கும் விருந்திற்கும் எக்காரணம் கொண்டும் போதல் கூடாது. அப்படிச் செய்தல் நமது சுயமரியாதைக்கு விரோதமாகும்' என்ற தீர்மானத்தைச் ஸெத்து கோவிந்ததாஸ் என்பார் கொண்டு வர, அது காங்கிரஸின் ஆமோதிப்பைப் பெற்றது.

ஆசியா கண்டத்தினருக்குள் நட்புவளரும் பொருட்டு, ஆசிய நாட்டார் மஹாநாடு கூட்டவேண்டும். காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியார் 1930ம் வருஷம் அம்மஹாநாட்டை இந்தியாவில் கூட்டத்தேவையானத்தைச் செய்யவேண்டும்.

இத்தீர்மானத்தை எஸ். சத்திய மூர்த்திஐயர் அவர்கள் கொண்டு வந்தார். இதுவும் காங்கிரஸின் அங்கீகாரத்தைப் பெற்றது.

பிறகு காங்கிரஸின் நோக்கத்தைப் பற்றியதீர்மானம், காந்தியடிகள் சப்ஜக்ட்டு கமிட்டியில் திருத்தி அமைத்தபடி மஹாநாட்டின்முன் பிரதி நிதிகளின் அங்கீகாரத்திற்கு வந்தது.

'சர்வகட்சி மஹா நாட்டாரால் ஏற்கப்பட்ட நேரு அறிக்கையை இம்மஹா நாட்டார்ஏற்கின்றனர். சென்னையில் செய்த முழுவிடுதலைத் தீர்மானப்படி, முழுவிடுதலையே இந்தியரின் நோக்க மெனினும், தற்கா

(19-வது பக்கம் பார்க்க.)

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான், K. S. வெங்கடரமணி M.A., B. L., ஆங்கிலத்தில் இயற்றியதும், இந்த நாட்டில் மாத்திரமல்லாமல் ஐரோப்பிய தேசங்களிலும் பெரிது கொண்டாடப் பெறுகின்றதுமான "Murugan, The Tiller" என்னும்

நாவல் நூலிற்கு

கிருஷ்ண குமாரி

என்பவரால் எழுதப்பெற்ற தமிழ் மொழிபெயர்ப்பு.

கதையின் அழகும் வாழ்க்கையின் தத்துவங்களும், மாநட இயற்கையும் பலவேறு பாத்திரங்களின் அமைப்பும் வாய்ந்த இப்புத்தகம் எளியநடையில் அமைந்திருக்கின்றது. (400 பக்கங்கள் கொண்டது)

விலை ரூ. **1-8-0** (வி. பி. சார்ஜ் வேறு). மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

வெண்பாப் புலி என்ற புகழோடு விளங்கியவரும்

ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் மாணாக்கரும் ஆகிய

ஸ்ரீ. தி. சு. வேலுசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றிய

கந்தபுராண வெண்பா

ஆறு காண்டங்களும் 5665 செய்யுள்களும் அடங்கியது.

இதுகாறும் வெளிவந்திராத இந்நூல் ஓதற்கினிய நேரிசை வெண்பாக்களால் அமைந்தது. அறுமுகக் கடவுளின் அருள்பெருகப் பாடிய இவ்வெண்பாக்கள் கற்றோர் இதயத்தைக் களிக்கச் செய்யும் தன்மையன.

விலை ரூ. **4-8-0**. வி. பி. சார்ஜ் வேறு.

மானேஜர், கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, சென்னைப்பட்டினம்.

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"

11, Vellala Street, Purasawalkum, Madras.

கம்பராமாயணம்
பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெருது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்ப ருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யு ளின் கருத்தை விளக்குகின்ருர்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ் வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0
(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,
“ கலா நிலயம் ”
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை.

189036

ஏமாங்கதத்
திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மை யும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலி னுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமி ழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப் பன வெகு சில.

விலை ரூ. 1 0 0
(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,
“ கலா நிலயம் ”
11, வெள்ளாளர் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை.

KAMBAN'S KOSALA
or
A Poet's Plea for Culture
by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being. The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum, Madras.

துத்தார.

நிம்பர்கா ன்பவர் நேருஅறிக்கை ஏற்றுக மகாஎ ளத்தக்க தல்லவென்று ஒருதிருத்தைக் கொண்டு வந் தார்.வேறு பலதிருத்தங்களும் கொண்டுவரப்பட்டன.

தீர்மானத்தையும் திருத்தங்களையும் பற்றி இரவு வெகு நேரம் வரையில் கடுமையான வாதங்கள் நிகழ்ந்தன.

காந்தி யடிகள் கடைசியில் தீர்மானத்தை எதிர்ப்ப வர்களுக்கு அளித்த விடை வருமாறு:—

1350 பேர் சாதகமாகவும், 973பே பாதகமாக வும் ஓட்டுக் கொடுத்தனர்.

நாபா மஹாராஜா நாட்டைவிட் டகற்றப் பட்ட தைக் கண்டிப்பதாகவும், பர்தோலி சத்தியாக்கிரஹ த்தை நடத்திய வல்லபாய் பட்டேலைப் புகழ்ந்தும் அயல்நாட்டுத்துணி பகிஷ்காரம் செய்யவேண்டுமென் றும் பல தீர்மானங்கள் செய்யப் பட்டன.

வர்த்தமானம்.

ஆப்கன் கலகம்:—ஆப்கனிஸ்தானத்தின் எல்லைப் புறத்திலுள்ள ஷின்வாரி வகுப்பினர் கலகம் விளைத்து வருகின்றனர். காபூலில் ஜனங்கள் இக்கலகத்தால் கஷ்டப்படுகின்றனர். கலகக்காரர் எலக்டிரிக்ஸ்டே ஷனில் சென்று இயந்திரங்களைக் கெடுத்து விட்ட னர். அதனுல் காபூல் முழுதும் இருட்டில் இருக்கின் றது.

பம்பாய் மில்லில் சண்டை:—பம்பாயில் உள்ள ஒரு மில்லில் இந்து முகமதியச் சண்டை ஏற்பட அதனுல் பலர் காயமடைந்தனர். அம்மில்லில் வேலை செய்யும் ஒரு முகமதியன் இந்து வேலைக்காரனைத் திட்டியதை இந்து விரும்பவில்லை என்றும், வார்த்தை வளர்ந்து சண்டையாய் மாறிற்றுஎன்றும் தெரிகிறது. போலீசார்வந்து சண்டையை நிறுத்தினராம்.

முஸலனியின் புத்திரி:—இத்தாலிய மந்திரி முஸல னியின் பெண் ஜனவரி மாதம் 1-ந்தேதி திருவனந்த புரம் வந்தார். திருவனந்தபுரம் அரசாங்கத்தார், அவ ரை ஆடம்பரத்துடன் வரவேற்று உபசரித்தனர். தர் பார் விருந்தினராக இரண்டொருநாள் அவர் தங்கு வார். குற்ருலமாளிகை அவரது வாசஸ்தலமாக அமைக்கப்பட்டுள்ளது.

லிபரல் கட்சி மஹா நாடு:—அலகபாத்தில், ஸர் சேதல்வாடின் தலைமையில் கூடிய லிபரல்கட்சி மஹா நாட்டில் குடியேற்ற நாட்டுரிமையை ஆதரித்துத் தீர் மானம் செய்யப்பட்டது. இம்மஹா நாட்டிற்குச் சிந் தாமணி, சாப்ரு, ஸர் வி. பி. இராமஸ்வாமி ஐயர் போன்ற பல பிரமுகர்கள் வந்திருந்தனர்.

தாழ்ந்த வகுப்பினர் முன்னேற்ற முயற்சி:—ஸ்ரீ மாளவியா, கங்கைக்கரையில் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த 300 பேர்களுக்குப் பிராய்ச்சித்தம் செய் வித்தார். இந்த 300 பேர்களில் 150-க்கு அதிகமான வர்கள் தீண்டக்கூடாதார் எனப்படுபவர். இதைப் பல வைதிகர் எதிர்த்தனர், என்ருலும் பிராய்ச்சித் தம் முடிந்தது என்று ஒரு கல்கத்தாச் செய்தி கூறு கின்றது.

பிரான்ஸ் காபினட்டில்அபிப்பிராயபேதம்:—பிரான் ஸ்காபினட்டில் மந்திரி பயான் கருச்கும் காபினட்டு அங்கத்தினர்களுக்கும், சினேட்டர்களின் சம்பள உயர்வு விஷயமாய் அபிப்பிராயபேதம் ஏற்பட்டுள் ளது. பயன்கர் சம்பளம் உயர்த்தப்படலாகாது என் ருர். மற்றவர் அவர் கூறுவதை ஏற்கவில்லை. எனவே அவரது பிரேரபணை சபையில் நிராகரிக்கப்பட்டது. இது விஷயமாய்க் காபினட்டில் தொல்லை ஏற்படும் என்று தெரிகிறது.

தேசபாஷை வளர்க்கும் வழி:—மஸூலி பட்டணத் தில், இருக்கும் ஐக்கிய சங்கப்பயிற்சிச் சாலைகளில் ஆங்கிலத்திலே போதிக்க வேண்டுமென்று ஐக்கிய சங்க ரிஜிஸ்டிரார்கூறியதைப்பலர் விரும்பவில்லை. ஐக் கிய சங்கக் கூட்டமொன்றில், தெலுங்கே போதிக் கும் பாஷையாய் இருக்க வேண்டுமென்று தீர்மா னித்தனர். பெஸவாடாவிலுள்ள பயிற்சிச் சாலையைத் தாங்கள் எடுத்துக் கொள்வதென்ருல், தெலுங்கு போதிக்கும் பாஷையாக இருக்க அனுமதிவேண்டு மென்றும் முடிவுசெய்தனர்.

கம்பராமாயணம்

பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறுது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்ப ருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யு ளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ் வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0

(வி. பி. சார்ஜ வேறு)

மானேஜர்,

... ஆது யாவரும்
அற்புத விஷயமே. வருஷ சந்தாரூபாய் ஒன்றே.
வெளி நாடு ரூ. 1 4 0 மாதிரி காப்பி இனும்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

ஏமாங்கதத்

திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மை யும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலி னுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமி ழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப் பன வெகு சில.

விலை ரூ. 1 0 0

(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,

... டையில் வாங்குப... ...க்கு
ரூபாய் இரண்டுக்குக் கொடு...படும்.
தபால் சார்ஜ் இனும்.
இன்றே எழுதுங்கள்!
நவீனகதா புத்தகசாலை,
மங்கமாரி வீதி, இரங்கூன்.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM C.C.S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET,

Purasawalkam, MADRAS.

Prnted at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)